தமிழ் உரைநடையும் கிறித்தவர் பங்களிப்பும்

பேராசிரியர் ம.செ. இரபிசிங்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழ் உரைநடையும் கிறித்தவர் பங்களிப்பும்

பேராசிரியர் ம.செ. இரபிசிங்
தமிழ் இணையப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 113

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113

கிறித்தவமும் தமிழும் அறக்கட்டளைச் சொற்பொழிவு
அறக்கட்டளை நிறுவியோர்: பேராயர் இரா. அருளப்பா
வரிசை எண்: 8 நாள் 10-3-2005

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Tamiḻ urainataiyum kiṟittuvar paṅkalippum
Author	:	Dr. M.J. Rabi Singh Senior Consultant Tamil Virtual University Chennai-600 113.
General Editor	:	Dr. S. Nirmala Devi Research Assistant International Institute of Tamil Studies
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai - 600 113. Ph: 044-2254 2992
Publication No.	:	534
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2005
Paper Used	:	18.6 TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	viii + 64
No. of Copies	:	1200
Price	:	Rs.20/- (Rupees Twenty only)
Printing	:	CREATIVE ENTERPRISES 203, Arcot Road, Vadapalani Chennai - 600 026
Subject	:	Tamil Prose

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

அணிந்துரை

கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்காகத் தமிழகம் வந்த மத போதகர்கள் கிறித்தவ மதத்தைப் பரப்புவதோடு தமிழையும் வளர்த்தனர். தமிழால் ஈர்க்கப்பட்ட அவர்கள் தங்களுடைய மதத்தைப் பரப்புவதற்குத் தமிழைத் துணையாகக் கொண்டனர்.

செய்யுள் நடை மக்களுக்கு எளிதாகச் சென்று சேராது என்பதால் ஆற்றல் மிக்க உரைநடை வடிவத்தை அவர்கள் தேர்ந்தெடுத்தனர்.

அச்சுக்கலை தமிழகத்தில் உருவெடுத்ததற்கும், அது இன்று பேரளவில் வளர்ந்திருப்பதற்கும் கிறித்தவர்களே காரணம். தொலைதொடர்பு, அஞ்சல், தந்தி போன்றவை புதிய சூழலையும் புதிய வாய்ப்புகளையும் மக்களுக்கு ஏற்படுத்தியது போல மத போதகர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அச்சுக்கலை தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெறும் மாறுதல்களை உண்டாக்கியது. வீரமாமுனிவர், சீகன்பால்கு ஐயர், கால்டுவெல், ஈரேனியஸ், எல்லீஸ் போன்ற கிறித்தவர்கள் தமிழ்மொழியைக் கற்றறிந்து, தமிழிலேயே தங்களுடைய படைப்புகளை உருவாக்கி அளித்தனர். இதிலிருந்துதான் கிறித்தவர்களின் தமிழ்ப்பணி எனும் புதிய அத்தியாயம் தொடங்கியது. இலக்கியம், இலக்கணம், அகராதி போன்ற வகைமைகளில் நூல்களை உருவாக்கியதோடு அரிய சுவடிகளைத் திரட்டுதலிலும் முனைப்புக் காட்டினர். இதனால் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய பரிமாணத்தைக் காண முடிந்தது. உரைநடை என்னும் இலக்கிய வடிவம் இன்று மொழிப் பரவலுக்கும் சமூகத் தொடர்புகளுக்கும் ஏற்ற வல்லமை மிக்க ஊடகமாக விளங்குகிறது என்று கூறினால் அதற்கு முழு முதற்காரணமாக இருந்தவர்கள் கிறித்தவர்களே என்பதை நாம் அறியலாம்.

இவ்வகையில் 'கிறித்தவமும் தமிழும்' என்ற பெயரில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பேராயர் அருளப்பர் அவர்களால் நிறுவப்பட்ட இவ்வறக்கட்டளையின் எட்டாம் சொற்பொழிவாக இச்சொற்பொழிவு நடைபெறுகிறது. இச்சொற்பொழிவினைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின்

பேராசிரியர் முனைவர் ம.செ. இரபிசிங் அவர்கள் '**தமிழ் உரைநடையும் கிறித்தவர் பங்களிப்பும்**' என்ற தலைப்பில் நிகழ்த்துகிறார்.

கிறித்தவர்களின் உரைநடைப் பங்களிப்புப் பற்றி பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப் பெற்றிருந்தாலும் பேராசிரியர் முனைவர் ம.செ. இரபிசிங் அவர்கள் வேறுபட்ட போக்கில் இச்சொற்பொழிவை வடிவமைத்திருக்கிறார். தமிழ் உரைநடையும் தொன்மைக் காலமும், தமிழகமும் ஐரோப்பாவும், அச்சுக்கலை அறிமுகம், ஆங்கிலக் கல்வியும் உரைநடையும், உரைநடை வளர்ச்சியில் ஐரோப்பியக் கிறித்தவர் பல்துறை உரைநடை நூல்கள், கிறித்தவர் பங்களிப்பு ஆகிய உள் தலைப்புகளில் இவ்வெழுத்துருவை உருவாக்கித் தந்துள்ளார். இச்சொற்பொழிவை ஆற்ற இசைவளித்த பேராசிரியர் அவர்களுக்கு நிறுவனத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வறக்கட்டளைக்குப் பொறுப்பாளராக இருந்து இச்சொற்பொழிவு நடைபெறவும், நூல் வெளிவரவும் துணை புரிந்த முனைவர் கு. நிர்மலாதேவி (ஆராய்ச்சி உதவியாளர், இலக்கியம் மற்றும் சுவடிப்புலம்)க்கும் நன்றி.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் திருமிகு சி.வி.சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் **திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,** அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் **திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த கணிப்பொறி உதவியாளர் திருமதி லட்சுமிக்கும், அழகுற அச்சிட்டுத் தந்த சென்னை, கிரியேட்டிவ் என்டர்பிரைசஸ் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

சென்னை
நாள்: 04-03-2005

ஆசிரியர் பற்றி. . .



பேராசிரியர் ம.செ. இரபிசிங், அடிப்படைப் பட்டம் பி.எஸ்சி., கணிதத்தில் பெற்றவர். பின்னர், எம்.ஏ. தமிழ் இலக்கியத்திலும், எம்பில். நடையியலிலும் பட்டம் பெற்றார். 'தமிழ் மலையாள சமூக நாவல்கள் - ஓர் ஒப்பியல் ஆய்வு' என்ற தலைப்பில் ஆய்வுசெய்து முனைவர் பட்டமும் பெற்றார்.

தொடக்கத்தில் வேலூர் ஊரிசுக் கல்லூரியிலும், பின்னர் அரசினர் கலைக்கல்லூரிகளிலும் விரிவுரையாளராகவும், துணைப் பேராசிரியராகவும் பணியாற்றினார். தொடர்ந்து மாநிலக் கல்லூரியில் துணைப் பேராசிரியராகவும், பேராசிரியராகவும் பணிசெய்தார். பூண்டி புட்பம் கல்லூரியில், முதுகலைப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் அரசின் அயற்பணியில் பணிபுரிந்தார். மேலும், வாரணாசியிலுள்ள பனாரசுப் பல்கலைக்கழகத்தில் அரசின் அயற்பணியில் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் விருந்தியல் புலப் பேராசிரியராகவும் பணிபுரிந்தார்.

தற்பொழுது, இணையத்தளம் (Internet) வாயிலாக உலகு தழுவி வாழும் தமிழர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் கல்வி வழங்கும் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில், அது தொடங்கப்பட்ட காலத்திலிருந்து மூதறிவுரைஞராகப் பணியாற்றி வருகிறார்.

'Social Novels in Tamil and Malayalam - A Comparative Study' என்ற ஆங்கில நூல் உட்பட 10 நூல்கள் வெளியிட்டுள்ளார். அவற்றுள் 'அண்ணாவின் மொழிநடை', 'தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுப்பணி', 'தமிழ் நாவல்களில் புதிய பரிமாணங்கள்' ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

உலகளாவிய நிலையில் 7 கருத்தரங்குகளிலும், தேசிய அளவில் 21 கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டு ஒப்பியல் பற்றியும், கணிப்பொறியின் அடிப்படையிலான 'A Tamil Knowledge Engine' என்பது பற்றியும் ஆய்வுக் கட்டுரைகளையும் வழங்கியுள்ளார்.

பேராசிரியரின் மேற்பார்வையில் 14 பேர் முனைவர் ஆய்வுப் பட்டம் பெற்றுள்ளனர். இந்தி, மலையாளம், செர்மன், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் சான்றிதழ்களும் மொழியறிவும் பெற்றவர். ஒப்பியல் ஆய்வுத்துறையில் குறிப்பிடத்தக்கவர். நவீன இலக்கியங்களில் குறிப்பாக நாவலில் ஈடுபாடுடையவர்.

நூலைப்பற்றி....

நான் பெரிதும் மதிக்கின்ற என்னுடைய பேராசிரியப் பெருந்தகை, டாக்டர். கா. மீனாட்சி சுந்தரனார் அவர்களது, **'The Contribution of European Scholars to Tamil'** என்னும் பிஎச்.டி. ஆய்வைச் சென்னைப் பல்கலைக்கழகம் நூலாக வெளியிடும் பொழுது, அந்நூலின் பொருளடைவு தயார்செய்வதற்கு உதவி செய்யும் நல்வாய்ப்பு மாணவனாகிய எனக்குக் கிட்டியது. அப்பொழுது அந்த நூலை முழுவதும் படித்தேன். 'சமயம் பரப்ப வந்த, இந்த ஐரோப்பியக் கிறித்தவப் பாதிரிமார், எவ்வளவு பெரிய இலக்கியப் பணியைச் செய்து, தமிழை வளப்படுத்தியதோடு உலகறியவும் செய்துள்ளனர்' என்ற பிரமிப்பு என்னுள் ஏற்பட்டது. அவர்கள் பணியைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற அவா அப்பொழுது என்னுள் எழுந்தது.

அதன் பின்னர், எனது பிஎச்.டி. ஆய்வுத் தொடர்பாகத் தகவல்களைச் சேகரிக்கும்பொழுது, ஐரோப்பிய கிறித்தவப் பாதிரிமார்கள் தமிழ் உரைநடைக்கு ஆற்றிய அரும்பணிகளையும் படைப்புகளையும் அறிந்து, பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்பட்டது. இப்பொழுது, மீண்டும் ஐரோப்பியக் கிறித்தவர்களின் இலக்கியப் பணியை நினைத்துப் பார்க்கும் வாய்ப்பை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வழங்கியது. இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியூட்டும் ஒரு செயல்.

பேராசிரியர் கா.மீ அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முதல் இயக்குநராகப் பணியாற்றிய பொழுது என்னுள் எழுந்த ஆசை, மீண்டும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அறக்கட்டளைச் சொற்பொழிவு வாயிலாகவே நிறைவு பெறுவது மனநிறைவை ஏற்படுத்துகிறது.

ஐரோப்பியர், கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டுடன் தமிழுக்குச் செய்த தொண்டை நினைவுகூரும் வகையில் 'கிறித்தவமும் தமிழும்' எனும் அறக்கட்டளை நிறுவப் பட்டதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். அதன் வாயிலாக எனக்குக் கிடைத்த வாய்ப்பிற்காக, அறக்கட்டளையை நிறுவிய தமிழ் உணர்வாளர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிறித்தவமும் தமிழும் அறக்கட்டளைப் பொழிவுக்கு வாய்ப்பு நல்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தார்க்கு, குறிப்பாக அதன் இயக்குநர் அவர்களுக்கு உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அறக்கட்டளையின் பொறுப்பாளர் முனைவர் சூ. நிர்மலா தேவி அவர்களுக்கு நன்றி.

எப்பொழுதும் என் பணிகளுக்கு ஊக்கம் கொடுப்பதிலும் உதவிகள் செய்வதிலும் மகிழ்வுகொள்ளும் பேராசிரியர் அ.அ. மணவாளன் அவர்களுக்கும், பேராசிரியர் டி.பி. சித்தலிங்கையா அவர்களுக்கும் என் நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்..

'தமிழ் உரைநடையும் கிறித்தவர் பங்களிப்பும்' என்ற தலைப்பிலான இப்பொழிவில் - நூலில் கிறித்தவர்கள் என்று குறிப்பிட்டிருப்பது ஐரோப்பியக் கிறித்தவர்களை மட்டுமே. தமிழர்களாகிய மதம் தழுவியவர்களைப் பிரித்துப் பார்க்காமல், தமிழர்களாக மட்டுமே கருதுவதால் அவர்கள் பணி இதில் இடம்பெறவில்லை.

ம.செ. இரபிசிங்

உள்ளே....

1

தமிழ் உரைநடையும் தொன்மைக் காலமும்

'ஐரோப்பிர் வருவதற்கு முன்னர்த் தமிழ்மொழியில் தனி உரைநடை நூல் இருந்ததில்லை. இலக்கணம், இலக்கியம், நிகண்டு, சோதிடம், மருத்துவம் முதலிய நூல்களும் செய்யுளிலேயே இயற்றப்பட்டு வந்தன. இவைகளுக்கு உரையாசிரியர்கள் இயற்றிய உரையைத் தவிர தனிப்பட்ட உரைநடை நூல் ஒன்றேனும் இருந்ததில்லை' என்று, சமயம் சார்ந்தவர் செய்த தமிழ்த் தொண்டைப் பற்றி ஆய்வு செய்த அறிஞர் மயிலை. சீனிவேங்கடசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார் (1936:15). மேலும், ஐரோப்பிய அறிஞர்கள் தமிழுக்கு அளித்த பங்களிப்பைப் பற்றி ஆய்வு செய்த பேராசிரியர் கா. மீனாட்சி சுந்தரனார் அவர்களும், 'தமிழில் உரைநடை என்பது அண்மைக் காலத்திய ஒரு புதிய வடிவம். அதற்கு ஒரு தொடக்கத்தை முறையாகக் கொடுத்து அதை வளப்படுத்தியவர்கள் ஐரோப்பியக் கிறித்தவ பாதிரிமார்' என்று கூறியுள்ளார் (1974:278).

ஐரோப்பியர் வருகைக்கு முன்னர், தனியான ஓர் உரைநடை நூல் இருந்ததற்குரிய சான்று எதுவுமில்லை. உரைநடையும் செய்யுளும் கலந்த நூல்கள் இருந்ததற்குரிய தகவல்கள் மட்டுமே உள்ளன. தொல்காப்பியச் சூத்திரம்,

> **தொன்மை தானே**
> **உரையொடு புணர்ந்த பழமை மேற்றே**
>
> *(செய்யுளியல்: 238)*

என்று குறிப்பிடுகிறது. அவற்றை, 'உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்றே குறிப்பிடுவர்.

பெருந்தேவனார் பாரதமும், தகடூர் யாத்திரையும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளுக்கு எடுத்துக் காட்டாகக் கூறப்படுகின்றன. இந்நூற்கள் இன்று கிடைக்கப் பெறவில்லை. இன்று உரைநடையும் செய்யுளுமாகக் கலந்த ஒரு நூலுக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்வது சிலப்பதிகாரம் மட்டுமே. சிலப்பதிகாரம், உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பதை,

> **உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்**
> **உரைசா லடிகள் அருள மதுரைக்**
> **கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்'**

என்னும் சிலப்பதிகாரப் பதிகச் செய்யுள் மூலம் அறிய முடிகிறது. சிலப்பதிகாரத்திலும் மிகச் சிறிய பகுதியே உரைநடையாக உள்ளது. எனவே, தனி உரைநடை நூல்கள் பண்டைக் காலத்தில் இயற்றப்படவில்லை என்பது தெளிவு.

பிற்காலத்தில் எழுந்த இறையனார் அகப்பொருளின் உரைப்பாயிரம், சிறந்த உரைநடை நூல் என்று குறிப்பிடுகின்றனர். அதன்பின்னர் வெளியான, **ஸ்ரீபுராணம், நாலாயிரத் திவ்விய பிரபந்த வியாக்கியானம்** ஆகியவைகளை உரைநடை நூல்களாகக் குறிப்பிடுவர். ஆனால் அவை, சமஸ்கிருதமும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையிலேயே எழுதப்பட்டவை. எனவே அவற்றையும் தனித்தமிழ் உரைநடை நூல்களாக ஏற்றுக் கொள்ள இயலாது.

மேற்குறிப்பிட்ட கருத்துகளிலிருந்து ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் தமிழில் உரைநடை என்பது ஓர் இலக்கிய வடிவமாகத் தோன்றிப் படிப்படியாக வளர்ச்சி யடைந்து வந்தது என்று கூற இயலாது. தொன்மைக் காலத்திலிருந்தே உரைநடைக் கூறுகள் இருந்தனவே தவிர, முழுமையான உரைநடை நூல்கள் இருந்தன என்று சொல்ல முடியவில்லை. கிறித்தவச் சமயம் பரப்ப வந்த ஐரோப்பியர்களே உரைநடை நூற்கள் பலவற்றை வெளியிட்டு, தமிழ் உரைநடையை வளர்த்தவர்கள் என்பதில் ஐயமில்லை.

2

தமிழகமும் ஐரோப்பாவும்

'பழைய இலக்கியச் சான்றுகளின் வாயிலாகவும், அகழ்வாராய்ச்சிகளின் வாயிலாகவும், பிறநாட்டு யாத்திரிகள் எழுதிய நூல்கள் வாயிலாகவும், தொன்மை யான காலத்திலிருந்தே தமிழகத்திற்கும் ஐரோப்பாவிற்கும் மிக நெருங்கியத் தொடர்புகள் இருந்திருக்கின்றன என்பதை அறிய முடிகிறது. தொடக்கத்தில் தமிழர் வாணிகம் சிறப்படையவும், வளம் பெறவும், தமிழக-ஐரோப்பியத் தொடர்புகள் வழிவகுத்தன. பிற்காலத்தில், குறிப்பாக 16-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஏற்பட்ட தொடர்புகள்; தமிழ் மொழியையும், இலக்கியத்தையும் சிறப்படையவும் வளம்பெறவும் செய்தன.

பிற்காலத்தில் சமயம் பரப்பும் பணிக்கு வந்த ஐரோப்பியர்கள் சிலர், தமிழ் மொழியின் பெருமையினையும், தமிழ் இலக்கியத்தின் சிறப்பினையும் அறிந்தனர். அவற்றை வெளிப்படுத்த முனைந்தனர். தம்மால் இயன்றளவிற்குத் தொண்டாற்றி தமிழ்மொழியை வளப்படுத்தினர். தமிழின் மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தனர். நவீனத் தமிழ் இலக்கியத் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படை அமைத்தனர். குறிப்பாக உரைநடையை வளப்படுத்தினர்.

2.1. தமிழரும் ஐரோப்பாவும்

மிகப் பழமையான காலத்திலேயே தமிழர்கள் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கினர். வாணிகத்தின் பொருட்டு ஐரோப்பிய நாடுகளுடனும் தொடர்பு கொண்டுள்ளனர். இதற்குரிய சான்றுகள் பல கிடைத்துள்ளன. தமிழகத்தில் சில இடங்களில் ரோமாபுரி நாணயங்கள் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சியில் கி.பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டிற்குரிய உரோமாபுரி நாணயங்கள்

கிடைத்துள்ளன. அந்நூற்றாண்டுகளில் தமிழகத்திற்கும் உரோமாபுரிக்கும் இடையே வாணிகத் தொடர்பு இருந்தமைக்குரிய சிறந்த சான்றுகளாக இவை திகழ்கின்றன. இவ்வாணிகத் தொடர்பு பற்றிய சில அரிய செய்திகளை **'ஏரித்திரியக் கடலின் பெரிப்புளூஸ்'** (Periplus of the Erithraen Sea) என்னும் கிரேக்க நூல் குறிப்பிடுகிறது என்று வரலாற்றுப் பேராசிரியர் கே.கே. பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார் (1981: 5).

தென்னிந்தியாவிற்கும், சுமேரியாவிற்கும் இடையில் கி.மு. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வாணிகப் போக்குவரத்து நடைபெற்று வந்தது என்பதைச் சேஸ் (Sayce) என்பவர்தம் ஹிப்பர்ட் சொற்பொழிவுகளில் (1887), குறிப்பிடுவதாகக் கே.கே. பிள்ளை கூறுகிறார் (1981: 52).

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கிரேக்கர்களுக்கும் தமிழருக்கும் வணிகத் தொடர்பு இருந்திருக்கிறது. அரிசி, இலவங்கம் போன்ற தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியில் இடம்பெற்றுள்ளன. கிரேக்கத்தோடு மட்டுமல்லாமல் யூதருடனும் சிரியருடனும் தமிழர்கள் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்று பேராசிரியர் கே.கே. பிள்ளை மேலும் குறிப்பிடுகிறார்.

மேற்குறிப்பிட்ட செய்திகளிலிருந்து தமிழர்கள் ஐரோப்பாவில் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது புலப்படுகிறது.

பிற்காலத்தில், 16-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஐரோப்பியரும் தமிழகத்துடன் வணிகத்தொடர்பும், அரசியல் தொடர்பும் சமயத் தொடர்பும் கொண்டனர்.

2.2. ஐரோப்பியரும் தமிழகமும்

ஒரு காலக்கட்டத்தில் வெனிஸ் கடல்வணிகத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்தது. அக்காலக் கட்டத்தில் வெனிஸ் இந்தியாவுடன் வணிகத் தொடர்பு கொண்டது. அது ஏனைய ஐரோப்பிய நாடுகளையும் இந்தியாவுடன் வணிகத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியது. மேலும், வாஸ்கோடகாமாவின் (Vasco-da-Gama) கடல் மார்க்கக் கண்டுபிடிப்பும் இந்தியாவுடனுள்ள வணிகத் தொடர்பை மிகுதிப்படுத்த வாய்ப்பளித்தது.

போர்த்துக்கீசியனாகிய வாஸ்கோடகாமா, 1498-இல் கள்ளிக்கோட்டையில் வந்து இறங்கினான். அதிலிருந்து போர்த்துக்கீசியாவுக்கும் இந்தியாவுக்கும் வணிகத் தொடர்பு ஏற்பட்டது. போர்த்துக்கீசியர்களைப் பின்பற்றி 1599-இல் டச்சுக்காரர்கள் வந்தனர். இந்தியாவுடன் வணிகத் தொடர்பை ஏற்படுத்தினர். டச்சுக்காரர்களின் வருகைக்குப் பின்னர், போர்த்துக்கீசியரின் ஆளுமையும் செல்வாக்கும் குறைந்தன.

ஆங்கிலேயர், 1625-ஆம் ஆண்டு சோழமண்டலக் கடற்கரைப் பகுதிக்கு வந்தனர். அதன்பின்னர், 1632-இல் சென்னப்பட்டினம் எனும் இடத்தை விலைக்கு வாங்கினர். மெட்ராஸ் (Madras) என்று அதற்குப் பெயர் மாற்றம் செய்தனர். தம் சேமிப்புக் கிடங்கைச் சுற்றி ஒரு கோட்டைக் கட்டி St. George Fort என அதை அழைத்தனர்.

பின்னர், 1672-ஆம் ஆண்டு பிரெஞ்சு நாட்டைச் சார்ந்த **பிரான்சிஸ் மார்ட்டின்** என்பவர், ஆங்கிலேயர் வாங்கிய அதே சோழ மண்டலக் கடற்கரை ஓரம் சென்னப் பட்டினத்திற்குத் தெற்கு பகுதியிலுள்ள புதுச்சேரி எனும் பகுதியை விலைக்கு வாங்கி, பிரஞ்சுக் குடியிருப்பை நிறுவினார். இவ்வாறு ஐரோப்பியர் தமிழகத்திலும் புதுவையிலும் வேரூன்றினர்.

2.2.1. ஐரோப்பியர் வருகையும் தமிழகச் சூழலும்

ஐரோப்பியரின் வருகையின்போது, தமிழகத்தில் ஒரு சுமுகமான சூழலில்லை. அரசியல் குழப்பங்கள், சமயச் சண்டைகள், சமுதாய ஏற்றத் தாழ்வுகளின் வாயிலாக ஏற்பட்ட சுரண்டல்கள் என்று பல்வேறு வகையான சிக்கல்கள் மலிந்திருந்தன. இவை வணிகம் செய்வதற்கு வந்த ஐரோப்பியர், அரசியலில் நுழைந்து ஆட்சி செலுத்து வதற்கும், தங்கள் சமயத்தைப் பரப்புவதற்கும் சாதகமான ஒரு சூழலை உருவாக்கின.

அரசியல் குழப்பங்கள் அந்நியர் ஆட்சிக்கு வழி வகுத்தன. சைவ வைணவச் சமயச் சண்டைகள் பிற சமயங்கள் வேரூன்ற வாய்ப்பளித்தன. ஐரோப்பியக் கிறித்தவர்கள் சாதி வேறுபாடின்றித் தாமே எல்லோரிடமும் பழகியதோடு, வேறுபாட்டை வேரோடு நீக்கமுற்பட்டனர். அதனால் சாதி வேறுபாடுகள், சாதியின் பெயரால் நிகழ்ந்த

ஒதுக்கப்படுதல் போன்றவை சமூக நீதியாகிய சமத்துவம் காண விழைந்தவர்களுக்குச் செல்வாக்கை ஏற்படுத்தின.

மக்களோடு மக்களாகக் கலந்து உறவாடி, உரையாடி; கல்வி, மருத்துவம் முதலிய பல உதவிகள் செய்து அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தனர்.

சாதியின் பெயராலும் சமயத்தின் பெயராலும் நிகழ்ந்த அநீதிகளுக்கு விடிவு ஏற்படும் வகையில் ஐரோப்பியக் கிறித்தவ மிஷினரிகள் தங்கள் சமயக் கருத்துகளைப் பிரச்சாரம் செய்தனர்.

● ஆதரவும் பாதுகாப்பும்

மேலும் ஐரோப்பியர்களின் சமுதாயத் தொண்டிற்கும் சமயத் தொண்டிற்கும் அக்கால ஆட்சியாளர்களிட மிருந்து ஆதரவும் கிட்டியது. நாயக்கர் ஆட்சிக் காலத்தில் (1529-1736) இயேசு சபையைச் சார்ந்தவர்களுக்கு ஆதரவு அளிக்கப் பட்டது. மதுரை **வீரப்ப நாயக்க மன்னன்**, கிறித்தவக் கோயில் கட்டுவதற்குக் கூட அனுமதி வழங்கினான்.

இராணி மங்கம்மாளும் மிகவும் ஆதரவு கொடுத்தார். சேதுபதியின் மகனாகிய **வடுகநாத தேவனும்** கிறித்தவப் பாதரிமார்களுடன் மிகுந்த நட்புறவு கொண்டிருந்தான்.

தஞ்சாவூரை ஆட்சி செய்த **சந்தாசாகிப்**, தம் ஆட்சியின் எல்லைக்குள் உள்ள பகுதிகளில் கிறித்தவப் பாதிரிமார் சமயத் தொண்டாற்றப் பாதுகாப்பு அளித்தான்.

● சமூகச் சீர்கேடுகளும் கிறித்தவமும்

மேல்சாதிக்காரர்கள் என்று அங்கீகரிக்கப்பட்டவர்கள் வசிக்கும் தெருக்களில் கீழ்ச்சாதியர் நடந்து போவதற்குத் தடை, பொது இடங்களில் செல்லுவதற்குத் தடை, மேல் சாதிக்காரர்கள் முன்னால் பெண்கள் மேலாடை அணியக் கூடாது என்ற சூழல், தேவதாசி முறை, உடன்கட்டை ஏறுதல், குழந்தை மணம், விதவைகளின் துயர் முதலிய சமூகச் சீர்கேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குரிய ஒரு புதிய சூழலைக் கிறித்தவ மதம் உருவாக்கியது. இதன் வாயிலாக ஒதுக்கப்பட்ட, சமூக அடிமட்ட மக்களிடையே ஒரு புதிய நம்பிக்கையைக் கிறித்தவ மதம் வழங்கியது. மேலும், சமுதாயத்தில் சம அந்தஸ்து, சம உரிமை, எல்லோரிடமும்

சமமாகப் பழகிப் பேசும் நிலை போன்றவை, புதிய சமயமாகிய கிறித்தவ மதம் தழுவியர்களுக்கு, எளிமையாகக் கிட்டியது. எனவே, சமயத் தழுவல்கள் (Conversion) தாராளமாக நிகழ்ந்தன.

சாதி இந்துக்களால் ஒதுக்கப்பட்டு, ஒதுக்குப்புறத்தில் இருந்தவர்களும் சாதியின் பெயரால் ஏற்றத்தாழ்வுடன் வாழ்ந்தவர்களும் பெருமளவில் கிறித்தவர்களாகினர்.

● **வாய்ப்பும் உரிமையும்**

மேலும் கிறித்தவப் பாதிரிமார்களால் நிறுவப்பட்ட கல்வி நிறுவனங்களில் எந்த ஒரு வேறுபாடுமின்றி, **"எல்லோருக்கும் கல்வி"** என்ற புதிய வாய்ப்பு ஏற்பட்டது. எனவே, சாதியின் பெயரால் பல நூற்றாண்டுகளாக மறுக்கப்பட்டிருந்த கல்வியைப் பெற்றமை சமுதாயத்தில் ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தியது.

நீண்ட நெடுங்காலமாக மறுக்கப்பட்ட உரிமைகள் ஐரோப்பியர்களால் - ஐரோப்பியக் கிறித்தவர்களால் - அரசியல் சட்டங்களால் கிடைத்தன. எனவே 'ஆத்ம இரட்சிப்பு' என்பதை விட, சமுதாயத் தடைகள் நீக்கப் படுதல் என்பது மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

இத்தகைய சூழலைத் தம் மதத்தைப் பரப்புவதற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர் ஐரோப்பியப் பாதிரிமார். தம் மதத்தைப் பரப்ப முற்படும்போது முதல் முயற்சியாக மக்கள் பேசும் மொழியை அவர்கள் கற்றனர். அம்மொழியின் வாயிலாகத் தம் மதக் கருத்துகளை மக்கள் மத்தியில் எடுத்துரைத்தனர். அதற்குரிய ஊடகமாக அச்சுக் கலையை அறிமுகப்படுத்தினர்.

அச்சுக்கலை அறிமுகம், ஐரோப்பியக் கிறித்தவர் களுக்குச் சமயம் பரப்புவதற்குத் துணை செய்தாலும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குக் குறிப்பாக உரைநடை வளர்ச்சிக்குத் தொடக்கக் காலத்தில் மறைமுகமான வாய்ப்பையும், பிற்காலத்தில் வெளிப்படையான பின்புலத்தையும் அமைத்துக் கொடுத்தது.

3

அச்சுக்கலை அறிமுகம்

ஐரோப்பியர் வருகை இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு மையத்தை ஏற்படுத்தியது என்பர். அதைப் போல இந்திய இலக்கியங்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை அது ஏற்படுத்தியது. அதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தது அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்ட அச்சுக்கலையேயாகும்.

● புதிய சூழலும் மாறுதலும்

தொலைத் தொடர்பு, அஞ்சல், தந்தி, இரயில் போக்குவரத்து போன்றவை புதிய சூழலையும், புதிய வாய்ப்புகளையும் ஏற்படுத்தியதைப்போல் ஐரோப்பியக் கிறித்தவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அச்சுக்கலை, இந்திய இலக்கியங்களில் பல மாறுதல்களையும், வளர்ச்சியையும் ஏற்படுத்தியது.

தமிழகத்தில், பர்த்தலோமேயு சீகன் பால்கு (Rev. Bartholomous Ziegan Balg) எனும் பாதிரியார், அச்சு இயந்திரத்தைக் கொண்டுவந்து, அச்சடித்தலைத் தொடங்கி னாலும், அதற்கு முன்னரே அச்சுக் கலை தொடர்பான பல வகையான முயற்சிகள் இந்தியாவிலும், வெளிநாட்டிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

● அச்சு எழுத்துக்கள்

'தமிழ் அச்செழுத்துக்கள் மேலைநாட்டில் தயாரிக்கப் பட்டு, தமிழ் நூற்கள் அங்கேயே அச்சிடப்பட்டிருக்கலாம்.

போக்குவரத்து, அனுப்புதல் ஆகியவற்றின் சிரமம் கருதி இந்தியாவிலும் பல இடங்களில் அச்சு எழுத்துக்கள் தயாரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்' என்று பேராசிரியர். கா. மீனாட்சி சுந்தரனார் கருதுகின்றார்.

ஸ்பெயினைச் சார்ந்த **ஜோன்ஸ் கோன்ஸால்வஸ்** (Jones Gonsalves) என்பவரால், 1577-ஆம் ஆண்டும், 1579ஆம் ஆண்டும் வைப்புக்கோட்டை என்னும் இடத்தில் தமிழ் நூல்கள் அச்சிடப்பட்டதாக மயிலை. சீனி. வேங்கடசாமி குறிப்பிடுகின்றார் (1936:35).

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புன்னைக்காயல் என்ற இடத்தில், 1578-இல் மரக்கட்டையில் தமிழ் எழுத்துக்களை உருவாக்கி அச்சிட்டனர் என **ஜோ.டி. பெரியா (Joao-de-Faria)** என்பவர் குறிப்பிடுகின்றார். அம்பலக்காடு எனும் இடத்தில் **இக்னேசியஸ் அய்சாமணி (Ignatius Aichamani)** என்பார், தமிழ் அச்சு எழுத்துக்களைத் தயாரித்தார் என்ற ஒரு செய்தியும் உள்ளது என பேராசிரியர் கா. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகின்றார் (1974: 87).

கேரளாவிலுள்ள கொச்சி என்ற இடத்திலும் 1578-இல், இயேசு சபை பாதிரிமார், அச்சுப்பொறிகளை ஏற்படுத்தினர் என்று ஒரு செய்தியும் கிடைக்கிறது.

ஆம்ஸ்டெர்டாம் (Amsterdam) எனும் இடத்தில் 1678-இல் தமிழ் அச்சு எழுத்துக்கள் உருவாக்கப்பட்டதாக **ஜான் மர்டாக் (John Murdock)** என்பவர் குறிப்பிடுகின்றார்.

ஐரோப்பாவிலுள்ள ஹாலே (Halle) என்ற இடத்தில், தமிழ் அச்சகத்திற்கான எழுத்துக்கள், 1710-ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு, 1713-இல் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டு, அச்சிடப்பட்டது என்றும் குறிப்பிடுவர். ஹாலே என்ற இடத்தில் **சீகன் பால்குவால்** தமிழ் நூல் அச்சிடப் பட்டதென்று **கமில் சுவாலபில்** கூறுகின்றார். ஆனால் ஹாலே எனும் இடத்தில் தயாரிக்கப்பட்ட தமிழ் எழுத்துக்களை தரங்கம்பாடிக்குக் கொண்டு வந்து, 1713-ஆம் ஆண்டிலேயே அச்சடிக்கத் தொடங்கினர் என மயிலை. சீனிவேங்கடசாமி குறிப்பிடுகின்றார்.

● **முதன்மை**

மேற்குறிப்பிட்ட கருத்துக்களிலிருந்து, தமிழ் அச்சு எழுத்துக்களை உருவாக்குவதிலும், தமிழ் நூல்களை அச்சடித்தலிலும், பல முயற்சிகள் ஐரோப்பியக் கிறித்தவர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது புலப்படுகிறது. மேலும், இந்தியாவிலேயே, முதல்முறையாகத் தமிழகத்தில் அச்சு இயந்திரத்தைக் கொண்டுவந்து தமிழ் நூல்களை அச்சிட்டனர் என்ற உண்மையும் தெரிகிறது.

3.1. உரைநடை நூல்கள் வெளியீடு

மக்களோடு நெருங்கிப் பழகிய ஐரோப்பிய பாதிரிமார், தங்கள் சமயக் கருத்துக்களை மக்களிடம் பரப்புவதற்குப் பல வழிகளைக் கையாண்டனர். அவற்றுள் ஒன்று, துண்டுப் பிரசுரங்கள், நூல்கள் ஆகியவை வாயிலாகச் சமயக் கருத்துக்களை மக்களிடம் கூறுதல். மேலும் துண்டுப் பிரசுரங்களையும், நூல்களையும் வெளியிடுவதற்கென்றே சில நிறுவனங்களையும் ஏற்படுத்தினர்.

● **நிறுவனங்களும் வெளியீடுகளும்**

ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியினரால், 'The College of Fort St. George' எனும் நிறுவனம் நூல்களை அச்சிடுவதற் கென்றே 1812-இல் நிறுவப்பட்டது. பின்னர், 1818-இல் சென்னைத் துண்டுப்பிரசுரக் கழகம் நிறுவப்பட்டது. பள்ளி மாணவர்களுக்கு நூல்கள் அச்சிடுவதற்கென 1820-இல் 'சென்னைப் பாடசாலை புத்தகச் சங்கம்' ஒன்று தொடங்கப் பட்டது. அது பல நூல்களை வெளியிட்டது. 1849-இல் திருநெல்வேலி புத்தகச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டு, தமிழ் நூல்கள் வெளியிடப்பட்டன. அதன் பின்னர், 1854-இல் பாளையங்கோட்டையிலும், நாகர்கோயிலிலும், நெய்யூரிலும், யாழ்ப்பாணத்திலும் 'தென்னிந்திய கிறித்தவப் பள்ளிப் பாடநூல் கழகம்' நிறுவப்பட்டு, தமிழ் நூல்கள் வெளியிடப் பட்டன.

● **நூல் வெளியீடு**

பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்த புதுச்சேரியிலிருந்து ஓர் அச்சகத்தைக் கைப்பற்றி, அதைச் சென்னையிலுள்ள

வேப்பேரி எனும் பகுதிக்குக் கொண்டுவந்து, அரசாங்கத்திற்குத் தேவையான நூல்களையும், கிறித்தவச்சமயத் தொண்டர்களுக்குத் தேவையான நூல்களையும் ஆங்கிலேய அரசாங்கம் வெளியிட்டது (1924: 89).

மேலும் பல இடங்களில் - குறிப்பாக நெய்யூர் (1830), இலங்கையிலுள்ள நல்லூர் (1821), நாகர்கோயில் (1822) போன்ற இடங்களிலும் அச்சகங்களை நிறுவி, தமிழ் நூற்கள் பலவற்றை வெளியிட்டனர்.

● முதல் நூல்களும் முயற்சிகளும்

மயிலை. சீனிவேங்கடசாமி, கி.பி. 1577-இல் '**கிறித்தவ வேதோபதேசம்**' (Flos sanctorum) என்னும் பெயருள்ள ஒரு நூல், வைப்புக் கோட்டை என்னும் ஊரில் அச்சிடப்பட்டது என்றும், **ஜோன் கோன்ஸால்வஸ்** என்னும் பெயருள்ள ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த இயேசு சபைப் பாதிரியாரால் உருவாக்கப்பட்ட அச்செழுத்துக்களால் அச்சிடப்பட்டது என்றும், இதுவே தமிழில் வெளிவந்த முதல் அச்சுப்புத்தகம் என்றும் குறிப்பிடுகின்றார்.

ஹென்றிக்ஸ் (Henriques) என்பவர், '**தம்பிரான் வணக்கம்**' என்ற ஒரு நூலை 1878-ஆம் ஆண்டு வெளியிட்டார். இது கிறித்துவ வழிபாட்டு நூலாகும். இதுவே அச்சில் வெளிவந்த முதல்நூல் என்றும் கூறப்படுகிறது.

கிறித்தவர் வளர்த்த பைந்தமிழ் என்ற தமது நூலில், 'Doctrine Christina' என்ற போர்த்துக்கீசியப் பெயர் கொண்ட வினா-விடைச் சுருக்க நூலே மேலை நாட்டில் அச்சடிக்கப் பட்ட முதல் இந்திய மொழிநூல்என்றும், இது மூன்றாம் ஜான் மன்னனின் ஆணையின்படி வெளியிடப்பட்ட முதல் கிறித்தவ வினாவிடை நூல் என்றும் டி.தேவராஜ் குறிப்பிடுகின்றார் (2000:19).

அச்சகங்களை நிறுவி, நூல்கள் வெளியிடும் நிறுவனங்களையும் ஏற்படுத்தி, நூல்கள் பலவற்றை முதல் முறையாகத் தமிழுக்கு வழங்கியவர்கள் ஐரோப்பியக் கிறித்தவர்கள். தொடக்க நிலையில் தம் சமயத்தைப் பரப்புவதற்கான துண்டுப் பிரசுரங்களையும், கிறித்தவச்

சமயம் சார்ந்த நூல்களையும் வெளியிட்டாலும், இப்பணிகள் மறைமுகமாகத் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெரும் அளவில் உதவின.

மேலும், ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் போன்றவற்றில் மட்டுமே பதிவு செய்யப்பட்டுத் தகுந்த பாது காப்பின்றி மறைந்து கொண்டிருந்த தமிழ் இலக்கியங்களுக்கு ஐரோப்பியக் கிறித்தவர்களால் கொண்டு வரப்பட்ட அச்சுக் கலை பெரும்பாதுகாப்புக் களஞ்சியமாகத் திகழ்ந்தது. பிற்காலத்தில் உ.வே. சாமிநாதையர், சி.வை. தாமோதரம் பிள்ளை போன்றோர், தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்து வெளியிடுவதற்கும் துணை செய்தது.

3.2. இதழியல் வெளியீடு

தமிழில் இதழியல் துறையை அறிமுகப்படுத்தி, அதன் பல்வேறு வகையான வளர்ச்சிக்கு அடிப்படை அமைத்தவர்கள் ஐரோப்பியக் கிறித்தவர்களே. அச்சுக் கலையின் பங்களிப்பில் இதழியல் துறைக்கு ஒரு தனி இடமுண்டு.

சமயக் கருத்துகளை மக்களிடம் எடுத்தியம்புவதற்குரிய வாயில்களுள் ஒன்றாக இதழியலைப் பயன்படுத்தினாலும், அது தமிழ் இதழியல் துறையின் வளர்ச்சிக்கும், பிற்காலத்தில் இதழியல் வாயிலாக உரைநடை வளர்ச்சி ஏற்படவும் வழி கோலியது.

அச்சிடப்பட்ட தமிழ் நூல்களின் பட்டியலை வெளியிட்ட ஜான் மர்டோக் (John Murdoch) என்பவர், 1865-ஆம் ஆண்டில் மட்டுமே 12 தமிழ் மாத இதழ்கள் வெளிவந்ததாகப் பட்டியலிட்டுள்ளார். அவற்றுள் 10 இதழ்கள் கிறித்தவப் பாதிரிமார்களாலும், 2 இதழ்கள் தமிழ் இந்துக்களாலும் வெளியிடப்பட்டன என்று குறிப்பிடு கின்றார். மேலும், இந்தியாவிலேயே **முதன்முதலாக மாத இதழ் தமிழில்தான் வெளிவந்துள்ளது.** இந்த இதழைச் சென்னைத் துண்டுப்பிரசுரக் கழகம் வெளியிட்டுள்ளது (1974:313).

● **சமய இதழ்கள்**

தொடக்கத்தில் சமயக் கருத்துகளை மக்களிடம் பரப்பும் நோக்கத்தோடுதான் இதழ்களை வெளியிட்டனர். அந்த வகையில் '**சமயப்பணி செய்தித் திரட்டு**' போன்ற கிறித்தவச் சமய இதழ்கள் வெளிவந்தன. இவை கிறித்தவச் சமயக் கருத்துகளைப் பரப்பும் நோக்கில் வெளிவந்தன.

● **சிறுவர் இதழ்கள்**

அதன் பின்னர், சிறுவர்களுக்கான இதழ்கள் தொடங்கப்பட்டன. '**பால தீபிகை**' என்னும் சிறுவர்களுக்கான இதழ், 1840-இல் நாகர்கோயிலில் வெளியிடப்பட்டது. அது 1852 வரையிலும் வெளிவந்தது.

இலங்கையில், அமெரிக்கன் மிஷன் சபையைச் சார்ந்தவர்கள், 1841-இல் '**உதய தாரகை**' எனும் சிறுவர் இதழை வெளியிட்டனர்.

அதன் பின்னர், பாளையங்கோட்டையிலிருந்து, பாளையங்கோட்டைத் திருச்சபையாரால், 1849-இல் '**சிறுபிள்ளையின் நேசத்தோழன்**' என்னும் சிறுவர் இதழ் வெளியானது. இவற்றைப்போல, சிறுவர்களுக்கான இதழ்கள் பல, ஐரோப்பியக் கிறித்தவர்களால் வெளியிடப்பட்டன.

● **மாணவர் இதழ்**

சிறுவர்களுக்கான இதழ்களை வெளியிட்டதைப் போல, மாணவர்களுக்கெனத் தனியாக இதழ்களையும் வெளியிட்டனர். யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கிறித்தவ தேசிய நண்பர் சங்கத்தார் 1859-இல் மாணவர்களுக்கென, '**பாலிய நேசன்**' எனும் இதழை வெளியிட்டனர்.

● **இதழ்களில் இந்துக்கள் பங்கு**

முதல்முறையாக, இந்துக்களும் பங்கு கொள்ளுமாறு '**தேச உபகாரி**' என்னும் இதழைக் கிறித்தவப் பாதிரியராகிய **பாயில்ஸ்** (Rev. F. Baylis) என்பவர் வெளியிட்டார். இது நெய்யூரில் வெளியிடப்பட்டது. பாயில்ஸ் பாதிரியாரின்

இந்த முயற்சி, தமிழ் இதழியலின் எல்லை விரிவடைவதற்குத் துணை செய்தது.

லுத்தரன் சபையைச் சார்ந்தவர்களும் 1863-இல் 'சுவிசேஷ தூதிகை' என்னும் ஓர் இதழை வெளியிட்டனர். இது, நாகர்கோயிலிலிருந்து வெளிவந்தது.

● பல்வேறு செய்தி இதழ்

பி. பெர்சிவல் (Rev. P. Percival) எனும் பாதிரியார், 1855-இல், ஒரு மாத இதழைத் தொடங்கினார். இது, முன்னைய இதழ்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நிலையில் தொடங்கப்பட்டது. இதில், அறிவியல், இலக்கியம், மொழிபெயர்ப்புகள், செய்திகள், வாசகர் கருத்து போன்ற பல செய்திகள் இடம்பெற்றன. இந்த இதழ், ஒரு புது வகையான முயற்சி. இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. எனவே, இதைப் பின்பற்றிப் பல்வேறு செய்திகளுடன் தமிழ் இதழ்கள் வெளிவரத் தொடங்கின.

● அரசுச் செய்தி இதழ்

'மாவட்ட அரசுச் செய்தி இதழ்' (District Gazettee) சென்னை மாநிலத்திலுள்ளோருக்காக வெளியிடப்பட்டது. இது, 1864-இல் தொடங்கப்பட்டது. இதில், அரசு ஆணைகள், வாராந்திர நிகழ்ச்சிகள், தட்ப வெப்பநிலை, நுகர்பொருட்களின் விலைப்பட்டியல் போன்றவையும், பிற செய்திகளும் இடம்பெற்றன. இது, சமயம் சாராத நிலையில், சமயத் தொண்டரல்லாதாரால் வெளியிடப்பட்டது. எனினும், பாதிரிமார்கள் தொடங்கி வைத்த இதழியல் பணியின் வளர்ச்சியாக இது அமைந்தது.

● இதழியில் பங்களிப்பும் உரைநடை வளர்ச்சியும்

இதழியல் போக்கின் மாற்றத்தினால், வாசகர் வட்டம் விரிவடைந்ததோடு, இதழ்களில் இடம்பெறும் செய்திகளும் விரிவடைந்தன. இத்தகைய நிலையில் தமிழ் இதழியல் துறை வளர்ச்சியடைந்தமை, தமிழ் உரைநடை வளர்ச்சிக்கும் பெருந்துணை செய்தது.

'சமயத் தொண்டாற்ற வந்த கிறித்தவப் பாதிரிமார்கள், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் கூட, வருங்கால இளைய தலைமுறையினரை மனத்திற்கொண்டு பல நல்ல பணிகளைச் செய்துள்ளனர். இதழியலை அறிமுகப்படுத்தியமையும், சிறுவர்களுக்கான இதழ்களைத் தொடங்கினமையும், இதழ்களில் மகளிர்க்கு முக்கியத்துவம் கொடுத்தமையும், தமிழுக்கு ஆற்றிய பெருந்தொண்டுகளில் ஒன்று' எனப் பேராசிரியர் கா. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகின்றார்.

தொடக்கக் காலத்தில் சமயம் பரப்பும் நோக்கத்தில் இதழியலை அறிமுகப்படுத்தினாலும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குக் குறிப்பாக உரைநடை வளர்ச்சிக்கு இதழியல் அளித்த பங்களிப்பு மகத்தானது என்பது வெள்ளிடமலை.

4

ஆங்கிலக் கல்வியும் உரைநடையும்

'ஐரோப்பியக் கிறித்தவப் பாதிரிமார், தம் சமயத்தைப் பரப்பும்பொழுது, அதன் ஊடே, மருத்துவமனைகளையும், கல்வி நிறுவனங்களையும் நிறுவுவதைத் தம் பணிகளில் ஒன்றாகக் கருதிச் செயல்பட்டனர். எனவே, பாதிரிமார்களால் பள்ளிகளும் கல்லூரிகளும் தொடங்கப் பட்டன. அக்கல்வி நிறுவனங்களில், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், ஆங்கிலத்தின் வாயிலாகவும் கல்வி வழங்கப் பட்டது. ஆங்கில இலக்கியம் பாடமாக வைக்கப்பட்டது. அதன் வாயிலாகப் பல நன்மைகள் விளைந்தன.

உலக மொழியாகத் திகழ்ந்த ஆங்கிலம் கற்றமை, உலகத் தொடர்புக்கு வாய்ப்பு நல்கியது. உலகத்தின் பல்வேறு பகுதிகளில் என்ன நடக்கின்றன என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ளும் சூழலை உருவாக்கியது. உலக அரசியல் மாற்றங்கள், சமூக மாற்றங்கள், இலக்கிய மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்தன - நிகழ்கின்றன என்பனவற்றை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. அதனால் அரசியல் விழிப்புணர்ச்சி, சமூக விழிப்புணர்ச்சி, இலக்கியம் தொடர்பான புது முயற்சிகள் ஆகியவை ஏற்பட்டன. எனவே, ஐரோப்பியரால் வழங்கப்பட்ட ஆங்கிலக்கல்வி, பல மாறுதல்களுக்கும் வளர்ச்சிக்கும் வழிகோலியது.

● ஆங்கிலம் அறிந்த நடுத்தர வர்க்கம்

எல்லோருக்கும் கல்வி என்ற ஒரு புதிய வாய்ப்போடு, இன்னொரு மொழியையும், அதன் இலக்கியத்தையும் கற்கும் சூழல் ஏற்பட்டது. அதனோடு, மேலை நாட்டு இலக்கியங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் உதவியது. மேலும், ஆங்கிலம் கற்ற ஒரு நடுத்தரவர்க்கம் (English Educated Middle Class) உருவாகியது. இந்த நடுத்தர

வர்க்கத்தால் இந்திய இலக்கியங்களில் பல மாறுதல்கள் நிகழ்ந்தன.

முன்னேறிய, முன்னேறிக் கொண்டிருக்கின்ற, மேலை நாட்டு இலக்கியங்களோடு, தம்மொழி இலக்கியங்களையும் ஒப்பிட்டு நோக்கும் புதிய சூழலை உருவாக்கியது. தம், தம் இலக்கியங்களையும் முன்னேற்றம் அடையச் செய்யவேண்டும் வளப்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

● புதிய இலக்கிய வடிவ அறிமுகம்

ஆங்கிலக் கல்வியின் வாயிலாக மேலை இலக்கியங்களைப் பற்றியும், இலக்கியங்களின் மாற்றங்கள்-வளர்ச்சிகள் பற்றியும் தெரிந்து கொண்ட, ஆங்கிலக் கல்வி கற்ற நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தோர், இந்திய இலக்கியங்களில் புதிய இலக்கிய வடிவங்களை அறிமுகப் படுத்தினர்.

அறிமுகப்படுத்தப்பட்ட புதியவகை இலக்கியங் களுக்குத் தேவையான வாசகர் வட்டமும் (Reading Public) இந்த நடுத்தர வர்க்கத்தால் உருவாக்கப்பட்டது. இதனால் புதிய இலக்கிய வகைகளுக்கு ஆதரவும் ஊக்கமும் கிடைத்தன. பல்வேறு இலக்கிய வகை வளர்ச்சிக்கு இவை அடிப்படையாக அமைந்தன.

● புதினம்

புதினம் (Novel) என்பது பதினெட்டாம் நூற்றாண்டில் மலர்ந்த ஒரு புதிய இலக்கிய வடிவம். இவ் இலக்கிய வடிவத்தை இந்திய இலக்கியங்களில் அறிமுகப் படுத்தியவர்கள், மேற்குறிப்பிட்ட நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். இந்திய இலக்கியங்களில் அந்தந்த மொழி இலக்கியங்களில் முதல் புதினத்தை எழுதியவர்கள் ஆங்கிலக் கல்வி கற்ற மேற்குறிப்பிட்ட நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்களே.

இந்திய மொழிகளில், முதல் புதினத்தை வெளியிட்ட பெருமை வங்காள மொழிக்கு உண்டு. வங்காள மொழிக்கு இப்பெருமையைச் சேர்த்தவர் பங்கிம் சந்திர சட்டர்ஜி என்பவர். இவர், ஆங்கிலக் கல்வி கற்ற பட்டதாரி. இவர் 'துர்கேஷ் நந்தினி' (1865) எனும் தம் புதினத்திற்கு எழுதிய முன்னுரையில், எல்லா வளமும் கொண்டுள்ள

வங்காள மொழியில், நவீன இலக்கியமாகிய - மேலை இலக்கியங்களில் அறிமுகமான புதினம் இல்லாத குறையைப் போக்குகின்ற வகையில் முதல் புதினத்தைத் தாம் எழுதியதாகக் குறிப்பிடுகின்றார்.

இந்திய மொழிகளில் வெளியான புதினங்களில் இரண்டாவது புதினம் தமிழில் வெளிவந்தது எனும் பெருமையைத் தமிழுக்கு வழங்கியவர் **மாயூரம் வேத நாயகம் பிள்ளை**. இவர், நீதிபதியாகப் பணியாற்றியவர். ஆங்கிலக் கல்வி கற்றவர். இவரும் **'பிரதாப முதலியார் சரித்திரம்'** (1879) எனும் தம் புதினத்தின் முன்னுரையில், 'வசனகாவியம்' (Prosaic Fiction) எனும் இலக்கிய வடிவத்தைத் தமிழுக்கு அறிமுகப்படுத்துவதில் தாம் மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிடுகிறார்.

முதல் மலையாளப் புதினத்தை எழுதிய **ஓ. சந்து மேனோன்** என்பவரும் ஆங்கிலக் கல்வி கற்ற ஒரு வழக்கறிஞர். தொடக்கக் காலத்தில் திருநெல்வேலியில் பணியாற்றிய நீதிபதி. இவரும், **'இந்துலேகா'** (1889) எனும் தம் புதினத்திற்கு எழுதிய முன்னுரையில், மலையாள இலக்கியத்தில் மேலை நாடுகளில் அறிமுகமான புதினம் எனும் புதிய இலக்கிய வடிவத்தை முதல் முறையாக அறிமுகப் படுத்துவதாகக் குறிப்பிடுகிறார்.

ஏனைய இந்திய மொழிகளிலும் புதினம் எனும் இலக்கிய வடிவத்தை அறிமுகப்படுத்தி எழுதியவர்களும் ஆங்கிலக் கல்வி கற்ற, நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த பட்டதாரிகளே. தமிழிலும், வேதநாயகம் பிள்ளையைத் தொடர்ந்து புதினங்களைப் படைத்த மாதவையா, இராஜம் அய்யர், பொன்னுசாமிப் பிள்ளை, வடுவூர். துரைசாமி அய்யங்கார், ஆரணி. குப்புசாமி முதலியார் முதலியவர்களும் ஆங்கிலக் கல்வி கற்ற நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்களே.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களிலிருந்து, ஆங்கிலக் கல்வியின் வாயிலாகத் தாம் தெரிந்து கொண்டவற்றை-புதுமையானவை என்று நினைத்தவற்றைத் தத்தம் மொழிகளில் முதன் முறையாக அறிமுகப்படுத்தினர் என்பதையும், அதனால் அவர்தம் மொழிகள் வளம் பெற்றன என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இவர்தம் முயற்சிகளால் உரைநடை இலக்கியம் வளர்ச்சியடைந்தது என்பதுவும் கண்கூடு.

● **புதினமும் உரைநடை வளர்ச்சியும்**

புதினத்தை, உரைநடை வளர்ச்சியின் வெளிப்பாடு (Off shoot of the Prose Development) என்பர். புதினத்தின் வளர்ச்சி உரைநடை வளர்ச்சியின் ஒரு நிலை. தமிழில் தாராளமாக வளர்ந்துள்ள உரைநடை இலக்கியமாகிய புதினம் தோன்றுவதற்கும், இன்றைய நிலையில் வளர்ந்துள்ளமைக்கும் ஐரோப்பியக் கிறித்தவச் சமயத்தார் நிறுவிய கல்வி நிறுவனங்களும், ஆங்கிலக் கல்வியும் பெரும் காரணங்கள் என்பதனை மறுக்க இயலாது.

● **சிறுகதையும் நாடகமும்**

புதினத்தைத் தொடர்ந்து சிறுகதை இலக்கியம் தோன்றுவதற்கும் உரைநடையிலான நாடகம் தோன்று வதற்கும் ஐரோப்பியக் கிறித்தவர்களின் பங்களிப்பால் வளர்ச்சியடைந்த உரைநடையே பெருங்காரணங்களாகும்.

● **சீர்திருத்தக் கொள்கையும் உரைநடை வளர்ச்சியும்**

மெக்காலேயின் (Lord Maculay) கல்விச் சீர்திருத்தக் கொள்கையும், 1835-இல் பென்டிங் பிரபு கொண்டு வந்த தீர்மானமும் இந்தியாவின் கல்விமுறையில் பல மாறுதல்களை ஏற்படுத்தின. மெக்காலேயின் கல்விக் கொள்கைகளில் ஒன்று, வட்டாரப் பேச்சு மொழியைப் (Vernacular) பாடத்திட்டத்தில் இடம்பெறச் செய்தல். வட்டாரப் பேச்சுமொழி பாடத்திட்டத்தில் இடம்பெற்றமை, உயர்கல்வி கற்போர் தமிழ் இலக்கியத்தைக் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தியது. இதனால் தமிழ் இலக்கியத்தின் பெருமையை உணர்ந்துகொள்ளவும், அதை வெளிப் படுத்தவும் ஆங்கிலக் கல்வி கற்ற நடுத்தர வர்க்கத்தினருக்கு வாய்ப்புக் கிட்டியது.

மேலும், உயர்கல்விப் பாடங்களில், தமிழ் இலக்கியம் பற்றிய உரைநடை நூல்களும், உரைநடை வாயிலான புதிய இலக்கியங்களும் இடம்பெற்றன. இச்சூழல் உரைநடை நூல்கள் பல தோன்றுவதற்கு வாய்ப்பளித்தது. இதனால் தமிழ் உரைநடை வளம்பெற்றது. இதுவும் ஐரோப்பியக் கிறித்தவப் பாதிரிமார்கள் ஆற்றிய கல்விப் பணியினால் ஏற்பட்ட ஒரு பயனேயாகும்.

5

உரைநடை வளர்ச்சியில் ஐரோப்பியக் கிறித்தவர்

பண்டைத் தமிழர்கள் ஐரோப்பாவுடன் கொண்ட வணிகத் தொடர்பு, கி.பி. 16-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் ஐரோப்பியர் தமிழகத்துடன் கொண்ட வணிகத் தொடர்பு, ஐரோப்பியர் வருகையின் போது தமிழகத்திலிருந்த அரசியல், சமூகச் சமயச் சூழல் ஆகியவை பற்றி முதலில் பார்த்தோம்.

சமயத்தைப் பரப்புகின்ற நிலையில் அறிமுகப் படுத்திய அச்சுக்கலையால் தமிழ் இலக்கியம் - குறிப்பாக தமிழ் உரைநடை வளர்ச்சியடைந்தமை பற்றியும், இதழியல் அறிமுகம் மற்றும் வெளியீடுகள் பற்றியும் இரண்டாம் நிலையில் எடுத்துரைக்கப்பட்டது.

மூன்றாவது நிலையில், ஐரோப்பியக் கிறித்தவப் பாதிரிமார்கள் கல்வி நிறுவனங்கள் பல நிறுவி, கல்வி கொடுத்தமையும் ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்தி யமையும், அதனால் உருவாகிய ஆங்கிலக் கல்வி கற்ற நடுத்தர வர்க்கத்தினரின் இலக்கியப் பணியும், உரைநடை வளர்ச்சியும் பற்றி விரிவாகக் கூறப்பட்டது.

தமிழ் உரைநடை வளர்ச்சிக்குரிய மேற்குறிப்பிட்ட பின்புலத்தை ஐரோப்பியர் பலர் அமைத்தனர். அவர்களுள், சிலர் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குச் சிறந்த பங்களிப்பை அளித்துள்ளனர். அவர்களுள் ஜோசப் பெஸ்கி எனும் வீரமாமுனிவர், டாக்டர் கால்டுவெல், டாக்டர் கிறீன், இராபர்ட்-டி- நொபிலி, டாக்டர் ஜி.யு.போப், சீகன்பால்கு, பெப்ரிஷியஸ், ஹென்றிபவர் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்கள் அனைவரும் கிறித்தவச் சமயம் பரப்புவதற்கு வந்த சமயத் தொண்டர்கள். ஆனால் அவர்களது சமயத்தொண்டை மறைக்கின்ற வகையில் அவர்களது தமிழ்த் தொண்டு மேலோங்கியது.

5.1. வீரமாமுனிவர்

ஐரோப்பாவிலிருந்து கிறித்தவ மதம் பரப்ப வந்த அறிஞர்களுள் வீரமாமுனிவர் தலையாயவர். தமிழ் மொழியின் சிறப்பறிந்து செயல்பட்ட ஒரு தமிழறிஞர். வீரமாமுனிவரின் அருந்தொண்டால், தமிழ்மொழி அளவிடற்கரிய பயன்களைப் பெற்றது. உலகளாவிய நிலையில் அறிமுகமாகிய வாய்ப்பு தமிழுக்கு ஏற்பட்டது. தமிழ், பல துறைகளில் வளர்ச்சி பெறும் நல்வாய்ப்பு கிட்டியது. பெருமளவில் தமிழ் உரைநடை நூல்களை இயற்றியதோடு, மேலும் தமிழ் உரைநடை வளர்ச்சி யடையவும் வித்திட்டவர் வீரமாமுனிவர்.

தமிழுக்கு அருந்தொண்டாற்றிய வீரமாமுனிவர், சமயம் பரப்பும் நோக்கத்தோடு தமிழகத்திற்கு வருகை தந்தமையும், தமிழ்மொழியைக் கற்று, தமிழில் ஈடுபாடு கொண்டமையும் தமிழ்மொழி பெற்ற பேறேயாகும்.

● வாழ்க்கை

ஐரோப்பாவின் ஒரு பகுதியாகிய இத்தாலி நாட்டின் வெனிஸ் மாநிலத்தைச் சார்ந்தவர் கொண்டான்ஸ் ஜோசப் பெஸ்கி எனும் வீரமாமுனிவர்.

இயேசு சபை குருவாக நியமிக்கப்பட்ட வீரமாமுனிவர், தமது 30-வது வயதில், 1710-ஆம் ஆண்டு லிஸ்பானிலிருந்து இந்தியாவிற்கு வந்தார். முதலில் கேரளாவிலுள்ள கொச்சிக்கு அருகாமையிலுள்ள அம்பலக்காட்டிற்கு வந்து, பின்னர், தமிழகத்தின் தென்பகுதியிலுள்ள தூத்துக்குடிக்கு வந்தார். அதன் பின்னர் தமிழகத்தின் பல இடங்களில் தம் சமயப் பணியினை மேற்கொண்டார்.

● முன்னோடியும் மாற்றமும்

தமிழுக்குத் தொண்டு செய்த, கிறித்தவப் பாதிரியா ராகிய இராபர்ட்-டி-நொபிலியை முன்னோடியாகக்

கொண்டு, 1711-ஆம் ஆண்டிலேயே ஓர் இந்து சந்நியாசியைப் போலக் காவி உடையணிந்து, தலையில் வித்தியாசமான ஒரு தலைப்பாகையையும் அணிந்து, சைவ உணவையே உண்டு ஒரு தமிழனாகவே தம்மை மாற்றிக் கொண்டார். ஆடையை மாற்றியதோடு தம் பெயரையும் மாற்றிக் கொண்டார்.

'கொன்ஸ்டான்ஸ்' என்பதற்கு 'தைரியம்' என்பது பொருள். வீரமாமுனிவர் தம் பெயரைத் **'தைரியநாத சுவாமி'** என அமைத்துக்கொண்டார். ஆனால் வீரமாமுனிவரது சமயப் பணியையும், தமிழ்ப் புலமையையும் ஈடுபாட்டையும் தொண்டினையும் உணர்ந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தார், தைரியநாத சுவாமியை, **'வீரமாமுனிவர்'** என்று அழைத்தனர். இறுதி வரையிலும் இப்பெயரே நிலைத்தது.

● பன்மொழிப் புலமை

தம் தாய்மொழியாம் இத்தாலியைத் தவிர, இலத்தீன், பிரஞ்சு, கிரேக்கம், எபிரேயம், போர்த்துக்கீஸ் ஆகிய மொழிகளையும் நன்கு கற்றிருந்தார். மேலும் இந்துஸ்தானி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் கற்றார். தமிழகம் வந்த பின்னர் தமிழ்மொழியைக் கற்றார்.

● பங்களிப்பு

பன்மொழிப் புலவராகிய வீரமாமுனிவர், தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டு அளவிடற்கரியது. குறிப்பாகத் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு அவர் அளித்த பங்களிப்பு மகத்தானது.

தமிழில் பெரும்புலமையும் பற்றும் ஈடுபாடும் கொண்ட தமிழனாகிய ஒரு தமிழ் அறிஞர் செய்யும் தமிழ்த் தொண்டை விடவும், சிறந்ததொரு தமிழ்த் தொண்டை வேற்று நாட்டைச் சார்ந்த ஒரு சமயத் தொண்டராய் செய்தார் என்ற பெருமை இத்தாலி நாட்டைச் சார்ந்த வீரமாமுனிவருக்கு உண்டு. தம் தாய்மொழியாம் இத்தாலிக்குச் செய்யாத தொண்டினைத் தமிழுக்குச் செய்தார் வீரமாமுனிவர் எனினும் மிகையாகா.

● குறிக்கோளும் தொண்டும்

சமயத் தொண்டராக வருகை தந்த வீரமாமுனிவர், 'தமிழுக்கு அருந்தொண்டு ஆற்றவேண்டும், தமிழின்

பெருமையை உலகறியச் செய்ய வேண்டும், இயன்றளவு நூல்களைப் படைத்துத் தமிழை வளப்படுத்த வேண்டும்' என்பது போன்ற உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டிருந்தார். அக்குறிக்கோள்களை நிறைவேற்றுவதைத் தம் வாழ்நாள் பணியாக மேற்கொண்டார்.

இன்னொரு மொழியைக் கற்கும் ஆர்வமும், சமயம் பரப்ப வந்த பகுதியிலுள்ள மக்கள்பேசும் மொழியைக் கற்கும் தேவையும் தமிழ்மொழியை வீரமாமுனிவர் கற்பதற்குரிய காரணங்களாக அமைந்திருக்கலாம். ஆனாலும், கற்ற அளவிலேயே நின்று விடாமல், தமிழ் மொழியில் புலமைபெற்று, அதை ஆய்வு செய்து, மொழி பெயர்த்து, எழுத்துச் சீர்திருத்தம் செய்து, இலக்கணம் எழுதி, அகராதி இயற்றி, பல்துறை நூற்கள் பல படைத்துத் தொண்டாற்றியதற்குரிய அடிப்படைக் காரணம் தமிழ்மொழியின் பெருமையை அவர் உணர்ந்தமையே யாகும். அது, தமிழுக்குக் கிடைத்த மாபெரும் சொத்து.

தமிழின் பழைய மரபுகளைப் பின்பற்றி, ஓர் அருமையான காப்பியம் இயற்றினார். சிற்றிலக்கியங்கள் படைத்தார். இலக்கண நூல் எழுதினார். முதல் தமிழ் அகராதியை யாத்தார். இருமொழி அகராதி, பன்மொழி அகராதி என அகராதிகளை உருவாக்கினார். மொழி பெயர்ப்புகள் பல செய்தார். உரைநடை நூல்கள் பல படைத்தார்.

5.1.1. உரைநடை நூல்கள்

வீரமாமுனிவர் 9 உரைநடை நூல்களை எழுதினார். அவற்றுள் 7 நூல்களே அச்சிடப்பட்டு நூல்களாக வெளிவந்தன. ஏனைய இரண்டு நூல்களும் கையெழுத்துப் பிரதிகளாகவே உள்ளன.

வீரமாமுனிவர் சமயத் தொண்டாற்றிய காலத்தில், வேறு வேறு பிரிவைச் சார்ந்த கிறித்தவ சமயத்தவர்களும் சமயப் பிரச்சாரம் செய்துவந்தனர். அவர்களுள், லுத்தரன் சபையைச் சார்ந்தவர்களுக்கும், வீரமாமுனிவர் பங்கு கொண்ட இயேசு சபையைச் சார்ந்தவர்களுக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடுகளும், கருத்து மோதல்களும் ஏற்பட்டன. அப்பொழுது வீரமாமுனிவர், தாம் சார்ந்த சபையினரின் கருத்துக்களை விளக்கவும், லுத்தரன் சபையாரின்

கருத்துக்களில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டவும், மறுத்துரைக்கவும் **'வேத விளக்கம்', 'லுத்தர் இனத்தியல்பு', 'பேதகம் மறுத்தல்'** போன்ற உரைநடை நூல்களை இயற்றினார். கிறித்தவக் குருமார்களுக்குத் துணைபுரியும் வேதியர்களின் கடமைகளைப் பற்றி, **'வேதியர் ஒழுக்கம்'** என்று உரைநடை நூலை எழுதினார். தமிழைச் செந்தமிழ் கொடுந்தமிழ் என இருவேறு வகைகளாகப் பிரித்து, அவற்றிற்குச் **செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம்** எனும் இரண்டு வகை இலக்கண நூல்களைத் தனித்தனியே எழுதினார் வீரமாமுனிவர். அதைப்போல உரைநடையின் இருவகைக் கூறுகளுக்கும் இரண்டு உரைநடை நூல்களை எழுதினார். செந்தமிழ் நடைக்கு **வாமன் சரித்திரத்தையும்**, கொடுந்தமிழ் நடைக்குப் **பரமார்த்த குரு கதையையும்** எழுதியுள்ளார்.

- **வேதவிளக்கம்**

முன்னர்க் குறிப்பிட்டது போல், லுத்தரன் சபையாரின் கருத்துக்களின் குறைகளைச் சுட்டிக்காட்டுவதற்காக எழுதப்பட்ட நூல் வேதவிளக்கம்.

இந்நூலை, வீரமாமுனிவர் 8 இயல்களாகப் பிரித்துள்ளார். இவற்றில் 140 தலைப்புகள் உள்ளன. நூலின் இறுதியில், நூலில் கூறப்பட்ட பொருள்களைப் பற்றி 14 பக்கங்களில் பொருளடக்க அகரவரிசை அட்டவணை (Index) கொடுக்கப்பட்டுள்ளது. **இத்தகைய பொருளடக்க அட்டவணையை நூலின் பின்பக்கத்தில் சேர்க்கும் மரபை முதன்முதலில் தமிழில் அறிமுகப்படுத்தியவர்** வீரமாமுனிவரே. *(1974: 281).*

நகைச்சுவையும், அங்கதமும் கலந்த உரைநடையை இந்நூலில் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார்.

- **பேதம் மறுத்தல்**

முனிவரின், வேத விளக்கத்திற்கு மறுப்பாகத் **'திருச்சபைப் பேதகம்'** என்னும் நூலை லுத்தரன் சபையார் போர்த்துகீஸியம் தமிழ் ஆகிய இருமொழிகளிலும் வெளியிட்டனர். இதற்கு மறுப்பாகப் **'பேதகம் மறுத்தல்'**

எனும் நூலை வீரமாமுனிவர் எழுதினார். இந்நூல் 1728-இல் இயற்றப்பட்டது.

- **லூத்தர் இனத்தியல்பு**

லூத்தரன் சபையார்கள் எழுதிய நூல்களில் காணப் பட்ட குறைகளைச் சுட்டிக்காட்டுவதற்காக எழுதப்பட்ட நூல் **லூத்தர் இனத்தியல்பு**.

லூத்தரன் சபையாரும் கிறித்தவச் சமயச் சார்பான பல உரைநடை நூல்களை எழுதி வெளியிட்டார்கள். அவற்றில் பல குறைகள் இருந்தன. அந்தக் குறைகளைக் கூறி, அவற்றிற் குரிய சரியான கருத்துக்களை இந்நூலில் வெளியிட்டார்.

- **வேதியர் ஒழுக்கம்**

முனிவர் இயற்றிய உரைநடைகளில் சிறந்த நூல் வேதியர் ஒழுக்கம். இது 28 அதிகாரங்களைக் கொண்டது. இந்நூல் 1730-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கத்தோலிக்கக் கிறித்துவத் துறவியர்க்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிய வேதியர்களின் வாழ்வையும் பணிகளையும் பற்றி இந்நூல் குறிப்பிடுகிறது.

இந்நூல் இலத்தீனிலும், தெலுங்கிலும், கன்னடத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது. டாக்டர் ஜி.யு. போப் அவர்களால் பாராட்டப்பட்டது.

- **அவிவேகபூரண பரமார்த்த குரு கதை**

இது ஒரு சிறுகதைத் தொகுப்பு நூல். இந்நூலில் மிகவும் நகைச்சுவையுடன் உரையாடல்களை அமைத்துள்ளார். தமிழில் எழுதப்பட்ட இந்நூலைப் பின்னர் முனிவரே இலத்தீனில் மொழிபெயர்த்தார்.

இந்நூல், கத்தோலிக்கக் கிறித்தவ மாணவர்களுக்காக இயற்றப்பட்டது. இந்நூலின் ஒரு பகுதி வேத விளக்கம் என்ற நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்நூல், 1845-இல் அச்சிடப்பட்டது. இதுவரையிலும் 8 பதிப்புகள் வெளிவந்துள்ளன.

பரமார்த்த குரு என்ற குருவிற்கு, மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன் என்று ஐந்து சீடர்கள் இருந்தனர். இவர்களுக்கிடையே நிகழும் நகைச்சுவை நிகழ்ச்சிகளையே, பரமார்த்த குரு கதை என்ற கதையில் குறிப்பிடுகின்றார் முனிவர். நிகழ்ச்சிகளை எவ்வாறு நகைச்சுவையாக அமைத்துள்ளார் என்பதற்கு எடுத்துக்காட்டாகக் கீழ்க்குறிப்பிடும் நிகழ்ச்சியைப் பார்க்கலாம்.

> ‘பரமார்த்த குருவும் அவரது ஐந்து சீடர்களும் ஏனைய சீடர்களை வினவுவதற்காகச் சென்று, கிராமங்கள் வழியாக மீண்டும் வரும்பொழுது ஒரு நாள் நடுஇரவு நேரத்தில் ஓர் ஆற்றங் கரைக்குச் சென்றார்கள்.
>
> அந்த ஆறு கொடியது என்றும், எனவே அது விழித்திருக்கும் வேளையில் அந்த ஆற்றைக் கடக்கக் கூடாது என்றும் கூறினார் குரு. எனவே அந்த ஆறு தூங்கிக் கொண்டிருக்கிறதா என்று அறிந்து வர, மிலேச்சன் எனும் தன் சீடனை அனுப்பினார். மிலேச்சன், புகையிலைச் சுருட்டை தீப்பற்ற வைப்பதற்காகக் கையிலேந்தி யுள்ள கொள்ளிக் கட்டையைக் கையிலேந்திக் கொண்டு சென்று, அதைத் தண்ணீருக்குள் செலுத்தினான். தீக்கட்டையைத் தண்ணீருக்குள் செலுத்தியதும் சுறீரென புகைந்த புகை வெளியே வந்தது. அதைக் கண்ட மிலேச்சன், பதறி ஓடி வந்து, ‘ஐயா, ஐயா இப்போது நதியைக் கடக்கத் தருணமன்று. அது விழித்திருந்தது. நான் தொட்ட உடனே நச்சு நாகம்போல் சீறித் தீயெரி கோபத்தில் பாய்ந்து என்னை எதிர்த்தது. அதன் கோபத்திலிருந்து உயிர்தப்பி ஓடி வந்தேன்!’ என்று குருவிடம் கூறினான்.

இவ்வாறு பல நகைச்சுவை நிகழ்ச்சிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

கடின நடையைப் பயன்படுத்தித் தன் புலமையை வெளிப்படுத்த விழைந்த நூலாசிரியர் வாழ்ந்த காலத்தில்,

அந்நியதேசத்து, அந்நிய மொழிக்காரராகிய வீரமாமுனிவர், மிக எளிய மொழி நடையைக் கையாண்டு, பாமரரும் படித்து மகிழும் வகையில் அமைத்திருப்பது பாராட்டிற் குரியது. இதைப் பிற்காலத்தில் பலர் பின்பற்றினர்.

- **வாமன் சரித்திரம்**

தேம்பாவணிக் காப்பியத்தில் 28-வது படலத்தில் இடம்பெற்றுள்ள சூசைக்கும் வாமனுக்கும் இடையிலான உரையாடல் பகுதி 'வாமன் சரித்திரம்' எனும் தலைப்பில் உரைநடை நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் 6 பக்கங்களையே கொண்டுள்ளது. இது, 1843-இல் அப்பாவு பிள்ளை என்பவரால் அச்சிடப்பட்டது. (1974: 286).

- **கையெழுத்துப்பிரதிகள்**

மேலும் கையெழுத்துப் பிரதிகளாகவும் சில உரைநடை நூல்கள் உள்ளன. '**திருச்சபைக்குப் பொதுநிருபம்**', '**திருச்சபைக் கணிதம்**' ஆகிய இரண்டும் அச்சிடப்படாமல் கையெழுத்துப் பிரதிகளாகவே உள்ளன. இவை இரண்டும் செண்பகனூரில் உள்ள இயேசு சபையாரின் ஆவணக் களரியில் உள்ளன.

திருச்சபையாருக்குப் பொது நிருபம் எனும் நூல் கத்தோலிக்கர் அனைவருக்கும் முனிவர் தாமே அறிவுரை கூறுவதுபோல் அமைந்தது.

திருச்சபைக் கணிதம் எனும் நூல், பழைய கிரகோரியன் பஞ்சாங்கத்தைப் (Gregorian Calender) போல் தமிழில் எழுதப்பட்ட ஒரு நூல். இந்தப் பஞ்சாங்கத்தைப் பற்றி வீரமாமுனிவர் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்:

> "ஐரோப்பாக் கணிதம் படிக்கும் கத்தோலிக்க ரோமன் திருச்சபையில் வருடந்தோறும் வருகிற வருஷப் பிறப்பு, மாதப்பிறப்பு, வாரம் தேதி வேற்றுமைகளுள் கடன் திருநாள் கடனொடு சந்தி சுத்த போசனங்களும் மற்றத் திருநாட்களுமறியும்படிக்குண்டாக்கப் பட்ட பஞ்சாங்கக் கணிதம்" என்று நூலின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளார். (1924: 285).

இந்நூல் 68 பக்கங்களைக் கொண்டது. சில வரிகளில் செய்யுளும் இடம்பெற்றுள்ளது.

5.1.2. மொழிபெயர்ப்பு நூல்

வீரமாமுனிவர் திருக்குறளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அதில் நல்ல புலமையும் பெற்றிருந்தார். (1924: 92) வாய்ப்புக் கிடைக்கும்பொழுதெல்லாம் திருக்குறளை மேற்கோள்களாகக் காட்டினார். அதன் பெருமைகளை எடுத்துரைத்தார்.

தாம் இயற்றிய தேம்பாவணி எனும் காப்பியத்தில் முப்பதிற்கும் மேற்பட்ட பாடல்களில், திருக்குறள் தொடர்களையும் கருத்துகளையும் கையாண்டுள்ளார். அதேபோல், **தொன்னூல் விளக்கம், செந்தமிழ் இலக்கணம், திறவுகோல்** ஆகிய இலக்கண நூல்களிலும் பல இடங்களில் திருக்குறளை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

- *முதல் முயற்சி*

திருக்குறளில் தமக்கிருந்த ஆழ்ந்த புலமையினால், முதன்முறையாக இலத்தீன் மொழியில் அதனை மொழி பெயர்த்தார். இம்மொழிபெயர்ப்பு ஐரோப்பிய மொழிகளில் மட்டுமல்ல **உலகமொழிகளிலும் முதல் முயற்சியாகும்.** மேலும் இம்முயற்சி பிற ஐரோப்பிய மொழிகளிலும் உலக மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டமைக்கு வழிகோலியது. வீரமாமுனிவரைப் பின்பற்றி, **டாக்டர் ஜி.யு.போப், எல்லீசு, மறைத்திரு. டுரு** (Rev. Drew) ஆகியோர் ஆங்கிலத்திலும், **மறைத்திரு. டாக்டர். கே. க்ராவ்ல்** (Graul) செர்மன், இலத்தீன் ஆகிய மொழிகளிலும் **ஆரியேல்** (Arial), பிரஞ்சு மொழியிலும் குறளை மொழிபெயர்த்தனர். எனவே, திருக்குறளை உலகறியச் செய்த பெருமை வீரமாமுனிவருக்கு உண்டு. இப்பணி, அவர் செய்த தமிழ்த் தொண்டுகளுள் தலையாயது.

திருக்குறளிலுள்ள அறத்துப்பாலையும், பொருட் பாலையும் மட்டும் மொழிபெயர்த்தார். அன்று, ஐரோப்பாவில் அறிஞர்களின் மொழியாகக் கருதப்பட்ட இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார்.

5.1.3. எழுத்துச் சீர்திருத்தம்

காலந்தோறும் மாறிவரும் தமிழ் எழுத்து வரி வடிவத்திலும் வீரமாமுனிவர் சில சீர்திருத்தங்களைச் செய்தார்.

முன்னர் எகர ஒகரங்கள் மேற்புள்ளி பெற்றன. பின்னர், அப்புள்ளிகளை எழுதுவோர் விட்டுவிட்டனர். மேலும், மெய்களோடு சேர்ந்து உயிர்மெய் ஆகும் பொழுது, ஏகார ஓகாரங்களோடு எகர, ஒகரங்கள் வேறுபாடு தெரியாமல் போயின. அவற்றிலுள்ள குழப்பத்தை நீக்கியவர் வீரமாமுனிவர். தமது பட்டறிவைப் பயன்படுத்தி, உயிர் மெய்யுடன் கூடிய எகர, ஒகரக் குறில், நெடில் வேறுபாடுகள் அமைய வழிவகுத்தார் முனிவர்.

தமது எழுத்துச் சீர்திருத்தத்தைப் பற்றிக் கொடுந்தமிழ் இலக்கண நூலில் குறிப்பிடுகிறார்.

- **தெளிவும் எளிமையும்**

தற்காலத்தில் வழங்கும் குறில் வடிவ, நெடில் வடிவக் கொம்புக் குறியீடுகளை அந்நூலில் எடுத்துக்காட்டுகிறார். வீரமாமுனிவர் செய்த எழுத்துச் சீர்திருத்தமும் அறிமுகப் படுத்திய குறியீடுகளும் தமிழ் உரைநடையில் பெரும் மாற்றத்தையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தின. உரைநடையில் ஒரு தெளிவும், எளிமையும் ஏற்பட்டது. கற்றவர்கள் மட்டு மல்லாமல், எழுதப்படிக்கத் தெரிந்த பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் மொழிநடை மாற்றம் கண்டது. பாமரர்களும் இலக்கியங்கள் படைக்கும் வாய்ப்பை உருவாக்கியது. இவை பல உரைநடை நூல்கள் வெளிவரக் காரணமாக அமைந்தன.

வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம் தமிழ் உரைநடை இலக்கியத்தை வளப்படுத்தியது.

- **மறுமலர்ச்சிப் பணி**

வீரமாமுனிவரின் உரைநடைப் பணியைப் பற்றி ஆய்வு செய்த பேராசிரியர் சூ. இன்னாசி அவர்கள் 'தற்காலத் தமிழ் உரைநடையில் காணப்படுகின்ற அனைத்துச் சிறப்புக் கூறுகளையும் கொண்டு, தமிழ் மறுமலர்ச்சி உரைநடைக்கு

வழியமைத்தவர் வீரமாமுனிவரே ஆகும்' என்று குறிப்பிடுகின்றார்.

5.2. இராபர்ட்-டி-நொபிலி

உரோமில், ஒரு செல்வக் குடியில் பிறந்தவர் இராபர்ட்-டி-நொபிலி (Rev. Robert-de-Nobili). தமது 17-ஆவது வயதிலேயே, இயேசு சபையில் சேரவிரும்பினார். நொபிலியின் தந்தை இறந்த பின்னர், அவரது பாதுகாவலராக (Guardian) இருந்த அவரது உறவினர், அவரது விருப்பத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர், 1596-இல், தமது 19-ஆவது வயதில், இயேசு சபையில் சேர்ந்தார். அதன்பிறகு 1603-ஆம் ஆண்டு மே மாதம் கோவாவுக்கு வந்தார். கோவாவிலிருந்து கொச்சிக்கும், கொச்சியிலிருந்து 1606-இல் மதுரைக்கும் வந்தார்.

- **இந்தியத் துறவி**

இந்தியாவைப் பற்றியும், இந்தியாவிலுள்ள சாதிகளைப் பற்றியும், இந்தியர்களின் மனப்பான்மை பற்றியும் முன்னரே நன்கு தெரிந்துவைத்திருந்தார் நொபிலி. எனவேதான் இந்தியர்கள் ஒத்துக் கொள்கின்ற வகையில், தம் ஆடையையும் மாற்றி, இந்திய இந்துத் துறவிகளைப் போல, கால்களில் சந்தனக் கட்டையையும் அணிந்து கொண்டு, சைவ உணவையே உண்டு, தம்மை 'உரோமன் பிராமணன்' என்று அழைத்துக் கொண்டு சமயப் பணியை மேற்கொண்டார்.

அந்நிய நாட்டைச் சார்ந்த, அந்நிய மொழி பேசுகின்ற ஒருவரோடு உறவு கொள்வதென்பது எளிதான செயல் அல்ல. இதை நன்கு உணர்ந்தவர் நொபிலி. எனவே, அந்நியத் தன்மையை நீக்கி, மக்களோடு மக்களாக உறவு கொள்ள விழைந்தார். எனவே, இந்துத் துறவிபோல் வேடந் தாங்கி, இந்துக்களை ஈர்த்தார். மேலும் அவர்கள் பேசும் மொழியில் அவர்களோடு உரையாடி, உறவாடுவதன் மூலம் அந்நியத்தை முழுமையாக நீக்கிவிடலாம் என்று கருதினார். எனவே, தமிழை நன்கு கற்றார். அதோடு, தமிழ் மொழியில் நூற்கள் படைக்கின்ற வகையில் நல்ல புலமையும் பெற்றார்.

இந்தியப் பழக்க வழக்கங்களை மேற்கோண்டு இந்தியனைப் போல் வாழ்ந்த நொபிலிக்குப் பிற சமயத்தைச் சார்ந்த நண்பர்கள் பலர் இருந்தனர். மக்களால் **தத்துவ போதகர்** என்று அழைக்கப்பட்ட நொபிலி, தாம் வாழ்ந்த இல்லத்தின் முன்னாலுள்ள மரத்தில் தம்மை ஒரு 'ராஜ சந்நியாசி' என்றும், 'சத்திய வேதத்தைத் தாம் போதிப்பதாகவும்' அறிக்கை ஒன்று எழுதித் தொங்கவிட்டிருந்தார்.

● **உரைநடையின் தந்தை**

நொபிலி எழுதிய தமிழ் உரைநடை நூல்தான் இன்று நமக்குக் கிடைக்கக் கூடிய தொடக்ககால உரைநடை நூல் *(1974:278)*. எனவே இவரைத் தமிழ் உரைநடையின் தந்தை என்று அழைப்பார்கள்.

5.2.1. உரைநடை நூல்கள்

வின்சென்ட் குரானின் (Vincent Cronin) என்பவர். 'இந்தியாவுக்கு ஒரு நல்முத்து' (A peral to India) எனும் தம் நூலில், இராபர்ட்-டி-நொபிலி மொத்தம் 7 நூல்கள் எழுதியதாகக் குறிப்பிடுகிறார். அவை கீழ்க்குறிப்பிடும் நூல்கள் எனப் பட்டியலிடுகிறார்.

1. ஞான உபதேசக் காண்டம்
2. ஆத்தும நிர்ணயம்
3. அஞ்ஞான நிவாரணம்
4. திவ்விய மந்திரிகை
5. தூசண திக்காரம்
6. புனர்ஜென்ம ஆட்சேபம்
7. ஞான சஞ்சீவி

மேற்குறிப்பிட்ட ஏழு நூல்களுள் கடைசி மூன்று நூல்களும் அச்சிடப்படவில்லை. அவை கொடைக்கானல் அருகிலுள்ள செண்பகனூரின் சுவடிக்கூடத்தில் (Archives) காணப் படுகின்றன என்று பேராசிரியர் கா. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகின்றார்.

ஞானோபதேசம் எனும் நூல் 5 பகுதிகளை உடையது என்றும், முதல் இரண்டு பகுதிகளும் 1775-ஆம்

ஆண்டு அச்சிடப்பட்டது என்றும், மூன்றாம் பகுதி 1907-இல் அச்சிடப்பட்டது என்றும் மந்திர வியாக்கியானம் எனும் நான்காவது பகுதியும் அச்சிடப்பட்டது என்றும் வின்சென்ட் குரானின் குறிப்பிடுகின்றார்.

'ஆத்தும நிர்ணயம்' என்ற நூல் 1899-ஆம் ஆண்டு, 'அஞ்ஞான நிவாரணம்' என்ற நூல் 1891-ஆம் ஆண்டும், 'திவ்விய மந்திரிகை' என்ற நூல் 1870-ஆம் ஆண்டும் வெளியிடப்பட்டதாக அவர் குறிப்பிடுகிறார் (1974:279).

மயிலை சீனி. வேங்கடசாமி, கீழ்க்குறிப்பிடும் 17 நூற்களை இராபர்ட்-டி-நொபிலி எழுதியதாகப் பட்டியலிடுகிறார் (1971:69 & 70).

1. ஞானோபதேச காண்டம்
2. மந்திர மாலை
3. ஆத்தும நிர்ணயம்
4. தூஷண திக்காரம்
5. சத்திய வேத லக்ஷணம்
6. சகுண நிவாரணம்
7. பரம சூட்சுமாபிப்பிராயம்
8. கடவுணிருணயம்
9. புனர்ஜென்ம ஆட்சேபம்
10. நித்திய ஜீவன் சல்லாபம்
11. தத்துவக் கண்ணாடி
12. ஏசுநாதர் சரித்திரம்
13. தவசுச் சதம்
14. நீதிச்சொல்
15. ஞான தீபிகை
16. அநித்திய நித்திய வித்தியாசம்
17. பிரபஞ்ச விரோத வித்தியாசம்

மறைத்திரு எஸ். இராசமாணிக்கனார் அவர்கள், நொபிலி 40 உரைநடை நூல்களை எழுதியதாகக் குறிப்பிடுகிறார். உறுதியாக 15 நூற்கள் உண்டு என்றும் கூறுகிறார் (1974: 279).

● **புது முயற்சி**

நொபிலியின் பெரும்பான்மையான நூல்கள், கிறித்தவச் சமயப் பிரச்சாரத்திற்காக எழுதப்பட்டவை. இருப்பினும், சில நூல்களில், பொதுக்கருத்துக்களும், அறிவியல் தொடர்பான செய்திகளும் இடம்பெற்றிருந்தன. **அஞ்ஞான நிவாரணம்** என்ற நூலில், கலிலியோவின் (Galileo) கண்டுபிடிப்புக்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இது தமிழ் உரைநடையில் ஒரு புது முயற்சி.

● **மொழி நடை**

நொபிலி, தமது சமஸ்கிருத மொழிப் புலமையாலும், தம்மை ஓர் அந்தணர் என்று அறிவித்துக்கொண்டு, உயர் சாதிக்காரர்களுடன் பழகியமையாலும், அவரது உரைநடை நூல்களில் சமஸ்கிருதச் சொற்களே மிகுதியாக காணப்படு கின்றன. பெரும்பாலும் அவரது நூல்களில் பேச்சுத் தமிழும், வழக்கத்திலில்லாத பல சொற்களும், தொடர்ச்சி இல்லாத மொழி நடையும் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் நொபிலி சொல்ல, பிறர் கேட்டு எழுதியதால் இவ்வாறு அமைந்துள்ளதாக மறைத்திரு. எஸ். இராச மாணிக்கனார் குறிப்பிடுகின்றார்.

நொபிலியின் மொழிநடை பெரும்பாலும் 17-ஆம் நூற்றாண்டின் பேச்சுத் தமிழைப் பிரதிபலிக்கிறது என்று குறிப்பிடுகிறார்.

நொபிலியின் மொழிநடைக்கு ஓர் எடுத்துக்காட்டு:

> ‘பின்னையும் இந்த மேரையைப் பத்துப் பத்தாய் விசாரித்தமனானாற் சுதனாயிருக்கிற மேரைக்கது போதாதென்று கண்டுபிடிப்போ மென்கிறதற்குத் தப்பாது.
>
> இப்படிப்பட்ட ஞரியம் வெளியாகும் படிக்கு சுதன் ஜெனிக்கிற மேரையைப் பத்தும் பத்தாய் விசாரித்தின்ன தென்று கண்டுபிடிக்கக் கடவோம்.

இப்பகுதி அவரது ஞானோபதேசம் எனும் நூலில் இடம்பெற்றுள்ளது.

நீண்ட சொற்றொடரையும், சமஸ்கிருதச் சொற்களையும் கொண்டுள்ளது அவரது உரைநடை.

5.3. டாக்டர் கால்டுவெல்

டாக்டர் கால்டுவெல், ஒரு சிறந்த மொழியியல் அறிஞர். இந்திய மொழியியல் அறிஞர்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

இந்திய மொழி எல்லாம் சமஸ்கிருதத்தின் வழி வந்தவை, தமிழும் சமஸ்கிருதத்திலிருந்து வந்த ஒரு மொழியே என்று கூறிவந்த கருத்துக்களைத் தம் மொழியியல் ஆய்வின் வாயிலாகப் பொய்யானவை என்று நிரூபித்தவர்.

திராவிடமொழி இனத்தை அடையாளங்காட்டி, தமிழ் ஒரு தனித்தன்மை வாய்ந்த மொழி, தொன்மை உடைய மொழி என்று உலகறியச் செய்த பெருமகனார் டாக்டர் கால்டுவெல். இன்று, தமிழ் ஒரு செம்மொழி (Classical language) என அங்கீகரிப்பதற்கும், அதை பெருமைப்படுத்துவதற்கும் அடிப்படை அமைத்தவர் கால்டுவெல். மொழியியலில் பல்வேறு வகையான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. ஆனால் இன்றுவரையும் அவரது ஆய்வின் முடிவை யாராலும் மறுத்துக் கூற இயலவில்லை. தமிழரின் தனிச் சிறப்புகளையெல்லாம் உலகறியச் செய்த ஒரு மொழியியல் அறிஞர் கால்டுவெல்.

ஆரியமொழியின் இலக்கணம் வேறு, திராவிட மொழியின் இலக்கணம் வேறு என கால்டுவெல் தம் நூலில் விளக்கியுள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென்னிந்திய மொழிகளுக்கும் அடிப்படை இலக்கணம் ஒன்றே எனத் தெளிவுப்படுத்தியுள்ளார்.

- வாழ்க்கை

டாக்டர் பிசப் கிராபர்ட் கால்டுவெல் அயர்லாந்து நாட்டைச் சார்ந்தவர். ஸ்காட்லேண்ட்டில் கல்வி கற்றார். தமது 20-ஆம் வயதில் கிறித்தவப் பாதிரியாராக மாறினார். பின்னர், சமயப் பணியின் பொருட்டு ஆங்கில நாட்டு இலண்டன் மிஷனரி சங்கத்தின் சார்பில் இந்தியாவுக்கு வந்தார். முதலில் சென்னைக்கு 1838-ஆம் ஆண்டு வந்தார்.

அதன்பின்னர், 1841-இல் திருநெல்வேலிக்குச் சென்றார். சென்னையிலிருந்து திருநெல்வேலி வரையிலும் நடந்தே சென்றார். கால்டுவெல், திருநெல்வேலிக்குச் சமீபமுள்ள இடையன் குடியில் குடியேறினார். சமயப் பணிகளுக்கிடையே பள்ளிகளையும் தொடங்கினார்.

ஐம்பத்து மூன்று ஆண்டுகள் தமிழ் நாட்டில் வாழ்ந்தார், 1814-ஆம் ஆண்டில் பிறந்த கால்டுவெல் 1891-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 28-ஆம் நாள் இறந்தார்.

- **தமிழ் கற்றல்**

இந்தியாவுக்குக் கப்பலில் வரும்பொழுதே, உடன் பயணம் செய்த, சென்னையில் ஆட்சியாளராக இருந்த சி.பி. பிரௌன் (C.P. Brown) என்பவர் வாயிலாகத் தமிழும் சமஸ்கிருதமும் ஓரளவுக்குக் கற்றுக் கொண்டார். கால்டுவெல் ஒரு பன்மொழிப் புலவர். இருப்பினும் தமிழ்மொழியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக வாழ்ந்தார். திருக்குறளையும், சீவகசிந்தாமணியையும் விரும்பிக் கற்றார்.

- **பங்களிப்பு**

கல்லூரியில் பயின்ற காலத்திலேயே பட்ட வகுப்பில் முதல் மாணவனாக (First Rank) விளங்கிய கால்டுவெல், தம் அறிவாற்றலாலும், மொழிப் புலமையாலும் **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** (A Comparative Grammar of the Dravidian Languages) என்ற ஓர் அரிய ஆங்கில நூலை வெளியிட்டார். இந்நூல் திராவிட மொழிகளின்- குறிப்பாகத் தமிழ்மொழியின் சிறப்பினை உலகிற்கு எடுத்தியம்பியது.

'தமிழ்மொழி வரலாற்றில் ஒரு திருப்புமுனை இந்திய மொழியியல் வரலாற்றில் ஒரு கலங்கரை விளக்கு. தமிழ்மொழிக்கு அவர் கொடுத்த ஒரு பெருங் கொடை' என்று பாராட்டப்பட்ட ஓர் ஆய்வு நூல், கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்.

கிறித்தவ விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியிலும் அவர் ஈடுபட்டார். மொழிபெயர்ப்புக் குழுவில் உறுப்பினராக இருந்து செயல்பட்டார்.

தொகை, அரிசி போன்ற தமிழ்ச் சொற்கள் எபிரேய மொழியில் இடம்பெற்றுள்ளமையை எடுத்துக்காட்டினார். இதன்மூலம் மேலை நாடுகளோடு தமிழர்கள் கொண்டிருந்த தொடர்பினை வெளிப்படுத்தினார். தமிழ் இலக்கியம் தொடர்பான ஓலைச்சுவடிகளைக் கண்டெடுப்பவர்களுக்குப் பரிசுகள் கொடுக்கப்படும் என அறிவித்தார் (1974:144) இத்தகைய அறிவிப்பும் முயற்சியும் ஓலைச் சுவடிச் சேகரிப்பிற்குப் பெருந்துணை செய்தன.

5.3.1. உரைநடை நூல்கள்

கால்டுவெல் பல உரைநடை நூல்களை இயற்றினார். கால்டுவெல், ஞானஸ்னானம், தாமரைத் தடாகம் நற்கருணைத் தியான மாலை, பரத கண்ட புராணம் ஆகிய உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

இவற்றுள் நற்கருணைத் தியானமாலை 1853-ஆம் ஆண்டும், தாமரைத் தடாகம் 1871-ஆம் ஆண்டும், வெளியாயின (1974:295).

பரத கண்டபுராணம் எனும் நூல், 1893-ஆம் ஆண்டு சென்னையில் வெளியிடப்பட்டது. இந்த நூலில் ஹோமரின் இலியத்துடன் மகாபாரதத்தை ஒப்பிடுகிறார்.

- மொழிநடை

கால்டுவெல்லின் உரைநடை மிக எளிமையானது. ஒன்றை இன்னொன்றுடன் ஒப்பிடும்போது எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்துரைப்பார். மேற் குறிப்பிட்ட நூலிலிருந்து அதற்கொரு சிறந்த எடுத்துக் காட்டு வருமாறு:

> ‘கிரேக்கத் தேசத்துக் கவிராயர்களில் முந்தலைவனான ஓமேர் எனப்பட்டவன் கட்டிய காவியத்தைக் கிரேக்கர் பாரமென்று சொல்லத்தகும். ஆனாலும் இந்து தேசத்துப் பாரதத்தில் கண்டிருக்கும் ஏராளமான கட்டுக் கதைகளும் பொய்களும் அந்தக் கிரேக்குப் பாரதத்தில் இல்லை. மெய்யை

அரிசி என்றும் வருணிப்பை உப்பு என்றும் சொன்னால், ஓமேரென்பவன் ஒரு கைப்பிடி அரிசியில் இரண்டு உப்புப் போட்டான் என்றும், பாரத கவிராயர்கள் இரண்டு அரிசியோடே ஒரு பிடி உப்புப் போட்டார் களென்றும் சொல்லலாம்'

மேற்குறிப்பிட்ட பகுதி, தமிழரல்லாத, ஓர் அந்நிய தேசத்தவர் எழுதியதாகக் கூற முடியாத வகையில், தமிழ்ப்புலமை பெற்ற ஒரு தமிழ் அறிஞர் எழுதியது போன்ற ஆற்றொழுக்கான மொழி நடை அமைந்துள்ளது. நல்ல தமிழ்ச் சொற்களைக் கையாண்டுள்ளார். 'சொல்லத்தகும்', 'கண்டிருக்கும்' போன்ற சொற்களைப் பயன்படுத்தியிருப்பது அதற்குரிய சான்றுகளாகும்.

- அருஞ்செயல்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இத்தகைய ஒரு தூய தமிழ்நடையைக் கொஞ்சமும் எதிர்பார்க்க இயலாது. சமஸ்கிருதம் கலந்தத் தமிழ்மொழி நடையைப் பயன்படுத்துவது தம் புலமையை வெளிப் படுத்துவதாகவும், தாம் ஓர் உயர்ந்த நிலையிலுள்ளவர் என்பதை புலப்படுத்துவதாகவும் கருதப்பட்ட காலமது. மறைமலையடிகளார் போன்றோர் தனித்தமிழ் இயக்கம் தொடங்குவதற்கு முன்னாலுள்ள காலமது. அந்தக் காலத்தில், தமிழரல்லாத ஒருவர், அதிலும் தம் மொழிக்குடும்பத்திற்குத் தொடர்பில்லாத மொழிக் குடும்பத்தைச் சார்ந்த ஒரு மொழிக்காரர், சமயம் பரப்புவதற்காகவே வந்தவர், இத்தகைய அருமையான நல்ல தமிழ் நடையைக் கையாண்டிருப்பது பாராட்டிற்குரிய ஒரு நல்ல முயற்சி. பிற்கால உரைநடை ஆசிரியர்களுக்கு ஒரு தூண்டுதலாகவும், ஓர் எடுத்துக்காட்டாகவும் அவரது மொழி நடை அமைந்திருந்தது.

5.4. டாக்டர். ஜி.யு.போப்

தமிழுக்கு அருந்தொண்டாற்றிய ஐரோப்பியக் கிறித்தவர்களுள் டாக்டர் ஜி.யு. போப் குறிப்பிடத்தக்கவர்.

இறுதிக்காலம் வரையிலும் தம்மை ஒரு தமிழனாகவே கருதி வாழ்ந்தவர். ஆங்கிலப் புலமையையும், தமிழ்ப் புலமையையும் பயன்படுத்தி, தம் மொழிபெயர்ப்புகளின் வாயிலாகத் தமிழ் இலக்கியத்தின் பெருமைகளையெல்லாம் உலகறியச் செய்த ஒரு பேரறிஞர் போப் அவர்கள்.

- **வாழ்க்கை**

ஜார்ஜ் உக்லோப் போப் (George Uglow Pope) ஸ்காட்லாண்டைச் சார்ந்தவர். 1820-ஆம் ஆண்டு ஏப்ரலில் பிறந்த இவர், இளமைப் பருவத்திலேயே மொழி கற்பதில் மிகவும் ஆர்வம் உடையவராகத் திகழ்ந்தார். போப் ஆறு வயதுடையவராக இருந்தபொழுது, அவருடைய பெற்றோர் இங்கிலாந்து நாட்டிற்குக் குடிபெயர்ந்தனர். அதன் பின்னர், அங்கு ஏபிரேய மொழியில் எழுதப்பட்டிருந்த விவிலியத்தின் பழைய ஏற்பாட்டையும் (Old Testament) கற்றார். தமது 19-ஆவது வயதில் கிறித்தவச் சமயத்தொண்டராக மாறினார்.

- **இந்திய வருகை**

தென்னிந்தியாவிலுள்ள தமிழ் பேசுவோர் வாழும் பகுதியில் கிறித்தவச் சமயத்தைப் பரப்புவதற்குத் தாம் செல்வதாக விருப்பம் தெரிவித்தார். அதன்படி, 1839-இல் இந்தியாவிற்கு வந்தார். கடல்மார்க்கமாக இந்தியா வருவதற்கு எட்டு மாதங்கள் ஆயின. இந்த எட்டு மாதங்களில், தமிழை நன்கு கற்றார். சென்னையிலுள்ள சாந்தோம் பகுதிக்கு வந்ததும், தமிழில் சமயப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார்.

பின்னர், தூத்துக்குடிக்கு அருகாமையிலுள்ள சாயர்புரத்தில் தங்கி, சமயத் தொண்டாற்றினார். சாயர்புரத்தில் ஒரு பள்ளிக்கூடம் தொடங்கி, அதில் அவர் ஆசிரியராகப் பணியாற்றினார். அந்தப் பள்ளிக்கூடம் இரவிலும் பகலிலும் செயல்பட்டது. பள்ளிக்கூடத்தில் போப் செய்த பணிகளைப் பாராட்டி, ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் நிதி உதவி செய்தது. போப், பள்ளி ஆசிரியராகப் பணியாற்றுவதையே பெரிதும் விரும்பினார். இருப்பினும் வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம்

சமயப்பணியும் ஆற்றினார். இவரது பணியின் நினைவாக போப் கல்லூரி என்ற பெயரில் சாயர்புரத்தில் ஒரு கல்லூரி நிறுவப்பட்டுள்ளது.

● புலமையும் பரிசும்

இளமையிலேயே மொழி ஆர்வலராக விளங்கி, பன்மொழிப் புலவராகத் திகழ்ந்த போப், தமிழ்மொழிமீது மிகுந்த பற்றும் ஈடுபாடும் புலமையும் பெற்றிருந்தார். எனவே, அவரது தமிழ்ப் பணியையும், புலமையையும் பாராட்டி, ஆசிய இராயல் சங்கம் (The Royal Asiatic Society) தங்கப்பதக்கம் ஒன்று வழங்கியது.

● தமிழ் மாணவன்

தமிழகத்தின் பல இடங்களிலும் பணியாற்றிய போப், இறுதிக் காலத்தில் இங்கிலாந்திற்குச் சென்றார். அங்கு 1808ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ஆம் நாள் இயற்கை எய்தினார். தமது கல்லறையில் 'தமிழ் மாணவன்' என்று பொறிக்கச் செய்தார்.

● தமிழ்ப் பணி

இந்தியாவுக்கு வந்த பின்னரும் பல முறை இங்கிலாந்து சென்று வந்தார். இங்கிலாந்து ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில், 1885-ஆம் ஆண்டு, தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். அங்குத் தமிழ்மொழியையும் தெலுங்கு மொழியையும் கற்பித்தார்.

பின்னர், 1886-இல் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். நாலடியாரையும் 1893-இல் மொழிபெயர்த்தார். மேலும், 1900-இல் திருவாசகத்தையும் மணிமேகலையையும் மொழிபெயர்த்தார். ஆனால் மணிமேகலை மொழிபெயர்ப்பு முழுமை அடையவில்லை.

5.4.1. உரைநடை நூல்கள்

வெளிநாட்டுக்காரர்கள் தமிழை எளிமையாகக் கற்கும் வகையில் போப், தமிழ் உரைநடை நூல்களை மிகவும் எளிமையாக எழுதினார். 'பள்ளிகளுக்காக இந்திய

வரலாறு' என்று அவர் எழுதிய நூல் 1878-ஆம் ஆண்டு ஹென்றி மோரீஸ் (Henry Moris) என்பவரால் அச்சிடப் பட்டது. அவர் எழுதிய 'தமிழ் கிளைமொழியின் கையேடு' என்ற நூல் தமிழ் உரைநடை நூல்களில் ஒரு புதிய முயற்சி. இந்த நூலின் இரண்டாவது பகுதியில், பயிற்சிகளை எவ்வாறு செய்யவேண்டும் என்பதற்குரிய குறிப்புகளும் விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இது தமிழ் உரைநடைகளில் இல்லாத ஒன்று.

தமிழில் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சமயம் சார்ந்த கட்டுரைகளும், பொதுவான கட்டுரைகளும் தமிழ் இலக்கியம் பற்றிய கட்டுரைகளும் இதழ்களில் வெளியாயின.

போப், சாயர்புரத்தில் பணியாற்றிய பொழுது நான்கு உரைநடை நூல்கள் எழுதியதாக அருள் தங்கையா என்பவர் குறிப்பிடுகின்றார் (1974:577). அவர் குறிப்பிடும் நூல்கள் வருமாறு:

1. இயேசுவின் வாழ்வின் ஆய்வு
2. கிறித்தவக் குடும்பங்களுக்கும் பள்ளிகளுக்குமுள்ள சமயப் போதனையின் சுருக்கம்
3. வழிபாட்டின் மூடநம்பிக்கை
4. தென்னிந்திய சபையின் தமிழ் ஜெப புத்தகம்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள எந்த நூலும் இன்று கிடைக்கப் பெறவில்லை.

சாயர்புரத்திலிருந்து தஞ்சாவூருக்குச் சென்றார் போப். அங்கு, வேதநாயகம் சாஸ்திரியாருடன் நட்புறவு கொண்டார். அதன்விளைவாக மேலும் பல தமிழ் நூல்களைக் கற்றார். தஞ்சாவூரிலும் பல உரைநடை நூல்களைப் போப் எழுதினார் என்பர்.

டாக்டர் போப், 1858-இல் தமிழில் 'இங்கிலாந்து வரலாறு' என்ற உரைநடை நூலை எழுதினார். 'தமிழ் உரைநடை வாசிக்கும் புஸ்தகம்' என்ற நூலை 1859-இல் எழுதினார். இந்த நூல், 5 பகுதிகளைக் கொண்டது. முதல்

பகுதியில் நீதிக்கதைகள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பகுதியில், பஞ்சதந்திரக்கதைகள் உள்ளன. நளனின் வரலாறு மூன்றாம் பகுதியிலுள்ளது. நான்காவது பகுதி இராமனது வரலாற்றைக் கூறுகின்றது. ஐந்தாவது பகுதி பலவகைப் பட்ட செய்திகள் அடங்கியது.

● மொழிநடை

மேற்குறிப்பிட்ட நூலில் அவர் கையாண்டுள்ள உரைநடை அவரது மொழிநடைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

> 'நான் நேற்றுப் பழந்துணிகளுடனே வந்தபோது யாதொரு சாப்பாடும் கிடைக்கவில்லை; இப்போது நன்றாய் உடுத்திக் கொண்டு வந்தபடியால், இதோ! நேர்த்தியான போசனங் கிடைத்தது'.

மேற்குறிப்பிட்ட பகுதியைப் படிப்போர், எந்த ஒரு சிரமமும் இல்லாமல் எளிமையாகச் செய்தியைப் புரிந்து கொள்ளும் வகையில் சொற்றொடரையும் சொற்களையும் அமைத்துள்ளார். கூட்டுச் சொற்றொடராக இருந்தாலும், பொருள் குழப்பம் இல்லாமல் உள்ளது. அதோடு நல்ல தமிழ்ச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார்.

அவர், தம் உரைநடை நூல்களில் கையாண்ட மொழிநடை, பாமரர்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் மிகவும் எளிமையான சொற்களால் அமைக்கப் பட்டது. போப்பின் இத்தகைய நடை, பலரை விரும்பிக் கற்கவும், அதைப்போல் உரைநடை நூல்கள் எழுதவும் தூண்டின.

தமிழில் உரைநடை நூல்கள் பலவற்றை எழுதி, உரைநடை இலக்கியத்தை வளப்படுத்திய டாக்டர். போப் அவர்கள் ஒப்பியல் இலக்கியத்தின் முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளார் என்று, பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் குறிப்பிடுகிறார். 'ஒப்பியல் இலக்கியத்தின் பண்பையும் பயனையும் சுட்டிக்காட்டியவருள் தமிழ் மாணவன் போப் பாதிரியார் தலையாயவர். 1885-இல் அதாவது சான்றோர் செய்யுள்கள் பல அச்சு வாகனம் ஏறும் முன்னரே போப் அவர்கள் மேல்வருமாறு எழுதுகிறார்:

"பழைய தமிழ்க் காப்பியங்களைப் பார்க்கும் பொழுது, அவற்றிற்கும் சமமான கிரேக்க இலக்கியங்களுக்குமுள்ள ஒற்றுமை புலனாகின்றது. உருவத்திலும், உள்ளடக்கத்திலும், சமுதாய நிலைமையிலும் பெரும் ஒற்றுமைகள் காணப் படுகின்றன"

என்று குறிப்பிடுகின்றார் என கைலாசபதி அவர்கள் சுட்டுகிறார் (1969:36). கிரேக்க இலக்கியத்தோடு தமிழ் இலக்கியத்தையும் ஒப்பிடும் வாய்ப்புகள் உள்ளன என அடையாளங் காட்டியவர் போப்.

5.5. சீகன்பால்கு

அச்சு இயந்திர அறிமுகம் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குக் கிடைத்த பெரும்பேறு. அச்சு இயந்திரத்தைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்து, தமிழ் உரைநடை நூல்கள் பல வெளிவருவதற்குக் காரணமாக இருந்தவர் சீகன் பால்கு. எனவே, தமிழ் உரைநடை வளர்ச்சியில் சீகன்பால்குவின் பங்களிப்பு மகத்தானது.

- **தமிழ் ஆர்வமும் கற்றலும்**

செர்மன் நாட்டைச் சார்ந்த பார்த்தோலோமாயிஸ் சீகன்பால்கு (Bartholomalus Ziegenbalg) செர்மனியிலுள்ள சாக்சனி மாநிலத்தில் உள்ள பல்ஸ்நிட்ஸ் என்னும் சிற்றூரில் 1682-ஆம் ஆண்டு, சூலை 10-ஆம் நாள் பிறந்தார். 1706-ஆம் ஆண்டு சூலை மாதம் 9-ஆம் நாள் தரங்கம்பாடிக்கு வந்தார். அங்கு 13 ஆண்டுகள் வாழ்ந்தார். மிகவும் அந்நியமான தமிழ்மொழியைப் படிப்பதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டார். மலபாரிலிருந்து தமிழாசிரியர் ஒருவரை அழைத்து, அவரைத் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கச் சொல்லி, தாமும் அம்மாணவர்களுடன் மண்தரையில் உட்கார்ந்து, மணலில் எழுதிப்பார்த்து, தமிழ் கற்றார். மேலும், அலெப்பா (Aleppa) என்பவரிடமும் முறையாகத் தமிழ் கற்றார்.

சீகன்பால்கு, 1714-ஆம் ஆண்டு ஒரு முறை ஐரோப்பாவிற்குச் சென்றார். அப்பொழுது தம்முடன்

இரண்டு தமிழ் இளைஞர்களை அழைத்துச் சென்றார். ஒருவர் தமக்கு உதவி செய்வதற்கும், இன்னொருவர், ஒவ்வொரும் நாளும் தம்மோடு தமிழில் உரையாடுவதற்கும் ஏற்பாடு செய்திருந்தார்.

தமக்குத் தமிழ் கற்பித்த அலெப்பா என்பவருக்கு முறையாகத் தமிழ் இலக்கணத்தைச் சொல்லித் தர இயல வில்லை. எனவே, சீகன்பால்குவே தம் சொந்த முயற்சியால் தமிழ் இலக்கணத்தை நன்கு கற்றார் (1974:72). தமிழ் ஏட்டுச் சுவடிகளையும் படிக்கக் கற்றுக் கொண்டார். தமிழ் நன்கு படிக்கத் தெரிந்த ஒருவரை அழைத்து, அவரைப் படிக்கச் சொல்லி, தமிழ் உச்சரிப்பைக் கற்றுக் கொண்டார்.

5.5.1. நூல்கள்

தரங்கம்பாடியிலிருந்து ஹாலேக்குக் கையெழுத்துப் படிகளாக உள்ள நூல்கள் பலவற்றை அனுப்பினார். அவற்றை நான்கு வகையாகப் பிரித்தார். அதில், தாம் எழுதிய 40 நூற்களையும் சேர்த்துள்ளார். அவை இன்றும் கையெழுத்து வடிவத்திலேயே இருக்கின்றன (1974:72).

ஜெர்மன் மொழியிலுள்ள 48 பாடல்களைச் சேகரித்து, அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து 1713-இல் வெளியிட்டார். விவிலியத்தின் பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் மொழிபெயர்த்தார்.

ஹாலே என்ற இடத்தில், சீகன்பால்கு எழுதிய மூன்று நூல்கள் 1958-இல் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் ஒரு நூல் தமிழிலுள்ள நீதிவெண்பா, கொன்றைவேந்தன், உலகநீதி ஆகியவற்றின் மொழிபெயர்ப்பு. இந்நூற்களைச் சீகன்பால்கு எழுதியதன் நோக்கம், மேலைநாடுகளில் மலபாரியர்கள் என்று அழைக்கப்பட்ட தமிழர்கள் பற்றிய தவறான கருத்துக்களை மாற்றி, அவர்களது பண்பாட்டையும் சிறப்புக்களையும் எடுத்துக்காட்டுவதற்காகவே என, அர்னோலெக்மான் (Arno Lehmann) என்பவர் குறிப்பிடுகின்றார்.

தரங்கம்பாடியில் வாழ்ந்தபோது, 1706-இல் தமிழ் உரைநடை அகராதி ஒன்றை எழுதத் தொடங்கினார். இரண்டு ஆண்டுகளுக்குப்பின்னர், மூன்று தலைப்புகளில்

கீழ், 20,000 சொற்களுடைய இந்த அகராதியை அமைத்தார். முதல் தலைப்பின் கீழ் ஒரு தமிழ்ச் சொல் இடம்பெறும், அடுத்த தலைப்பில் இலத்தீன் எழுத்தும் மூன்றாம் தலைப்பின்கீழ் தமிழ்ச் சொற்களுக்குரிய ஜெர்மன் மொழிபெயர்ப்பும் இடம்பெற்றிருக்கும். இது, தமிழ் அகரவரிசைப்படி அமைக்கப்படவில்லை. ஜெர்மன் மொழியில் பொருளடைவு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த அகராதி, மீண்டும் 1712-இல் திருத்தி அமைக்கப்பட்டது. அப்பொழுது அகரவரிசைப்படி மாற்றியமைத்ததோடு, சொல் உருவாக்கம், மரபுத் தொடர் ஆகியவற்றையும் சேர்த்து 40,000 சொற்களுடன் அகராதி உருவாக்கப்பட்டது. இது, பின்னர் தமிழ்-இலத்தீன் அகராதியாக மாற்றப்பட்டது.

'சீகன்பால்கு, தமிழில் இருந்த நீதி நூல்களான உலக நீதி, கொன்றை வேந்தன் நூல்களை செர்மன் மொழியில் மொழிபெயர்த்தார், 119 தமிழ்ப் புத்தகங்களைச் சேகரித்தார். மருத்துவம், தத்துவம், செய்யுள் - இப்படிப் பல்வேறு தலைப்புகளில் குறிப்புகளைக் கொண்ட ஓலைச் சுவடிகளைப் பல இல்லங்களிலிருந்து விலைக்கு வாங்கி, தம் தாய்நாட்டிற்கு அனுப்பினார்' (2003:6). 'வாகு சாஸ்தரம்' என்ற தமிழர்களின் மருத்துவக் கலையினைச் சீகன் பால்கு ஆராய்ந்து குறிப்புகளை விரிவாக எழுதி வைத்தார். தமிழ் மருத்துவர்களின் அறிவுக் கூர்மையை வியந்து சீகன் பால்கு எழுதியுள்ளார் (2003:7).

சீக்ன்பால்கு, தமிழ் உரைநடையில் கட்டுரை எழுதியமை பற்றியும், நூற்கள் பல எழுதியமை பற்றியும் குறிப்புகள் பல இருக்கின்றன. அச்சாகிய முழுமையான ஒரு நூலும் நமக்கு கிடைக்கவில்லை.

எனவே, சீகன்பால்கு, தமிழ் உரைநடை வளர்ச்சியில் பங்குகொண்டு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்பது மட்டும் தெரியவருகிறது.

ஆனால், இவற்றிற்கெல்லாம் மேலாக, அவர் தரங்கம்பாடியில் அச்சு இயந்திரத்தைக் கொண்டு வந்து

அச்சகத்தை நிறுவி, ஏடுகளிலும் கையெழுத்துப் பிரதிகளிலும் இருந்த தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிட்ட ஓர் அரிய பணியைச் செய்தார். அது சீகன்பால்கு தமிழ் உரைநடைக்குக் கொடுத்த பெரும்பங்களிப்பு ஆகும்.

5.6. பெப்ரிஷியஸ்

யோகன் பிலிப்பு பெப்ரிஷியஸ் (Johann Philipp Febricius) என்பவர் ஐம்பது ஆண்டுகள் தமிழகத்தில் வாழ்ந்து தமிழ்த் தொண்டு செய்த ஓர் அருளாளர். தம் விவிலிய மொழிபெயர்ப்பாலும் அருளுரைகள் வாயிலாகவும் தமிழ் உரைநடைக்கு வளம் சேர்ந்த ஒரு கிறித்தவத் தமிழ்த் தொண்டர்.

● வாழ்க்கை

செர்மனியிலுள்ள பிராங்பாட் என்ற நகரின் அருகாமையிலுள்ள கிளிபர்க் (Cleeberg) என்னும் ஊரில் 1711-ஆம் ஆண்டு, சனவரி மாதம் 22-ஆம் நாள் தோன்றினார். இல்கீசன் என்னும் ஊரில் உள்ள பல்கலைக்கழகத்தில் தத்துவம், சட்டம் பயின்றார். 1739-இல் குருவாக நியமிக்கப்பட்டார். அதன்பிறகு 1740-இல் இந்தியாவுக்கு வந்தார். இந்தியாவில் தமிழகத்தைச் சார்ந்த கடலூர் பகுதிக்கு வந்தார். இந்தியா வந்தபின் இறுதிவரை, தம் தாய்நாட்டிற்குச் செல்லவில்லை. திருமணமே செய்து கொள்ளாமல் தமது 80 வயது வரையிலும் தமிழகத்தில் வாழ்ந்து, தமிழ்த் தொண்டு செய்த பெப்ரிஷியஸ் 1791-ஆம் ஆண்டு சனவரி மாதம் 23-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

● தமிழ் கற்றல்

தமிழகம் வந்த ஏழுமாதங்களில் தமிழ்மொழியைக் கற்றார். தமிழ் இலக்கணத்தையும் முறையாகக் கற்றார். தம் தமிழ் மொழிப் புலமையைப் பயன்படுத்தி விவிலிய மொழி பெயர்ப்புப் பணியை மேற்கொண்டார்.

● தமிழ்ப் பணி

தமிழ் விவிலிய மொழிபெயர்ப்பு வரலாற்றில் பெப்ரிஷியசுக்கு முக்கியப் பங்குண்டு. இவரது மொழி

பெயர்ப்பு பின்னர் வந்த மொழிபெயர்ப்புகளுக்கு அடிப்படையாகவும் வழிகாட்டியாகவும் அமைந்தது.

விவிலிய மொழிபெயர்ப்புப் பணியோடு அகராதிப் பணியையும் மேற்கொண்டார். 1779-இல் இவரது ஆங்கில-தமிழ் அகராதி வெளியிடப்பட்டது. இந்த அகராதி அரும்பணியாளருக்கும், வணிகர்களுக்கும் பயன்படும் வகையில் அமைந்திருந்தது.

கிறித்தவ வழிபாட்டிற்குரிய பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். இவர், இலக்கண நூல் ஒன்றை எழுதியதாகக் கூறப்படுகிறது. இது, 'மலபார் இலக்கணம்' என்ற பெயரில் வெளியிடப்பட்டதாகச் சி.எஸ். மோகனவேலு என்பவர் குறிப்பிடுகின்றார் (2003: 17).

5.6.1. உரைநடைப் பங்களிப்பு

பெப்ரிஷியசின் விவிலிய மொழிபெயர்ப்புகள் ஒரு வகையில் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குத் துணை செய்தன. அவரது மொழிபெயர்ப்புகள், கிறித்தவச் சமயம் சார்ந்த பல உரைநடை நூல்கள் தோன்றுவதற்கு வழிகோலின.

கிறித்தவச் சமயக் கருத்துகளைப் பரப்புவதற்காகத் தொண்டாற்றிய பெப்ரிஷியஸ் பாதிரியார், அருளுரை ஆற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். 'தாம் ஆற்றிய பல உரைகளைத் தொகுத்து வைத்திருந்தார். அவை அவரது மறைவுக்குப் பின் ஒரு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் 300-க்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்டது' (2003:7) என்று கூறப்படுகிறது.

பாதிரியார், தம் அருளுரைகளில் பயன்படுத்திய மொழிநடையைப் பலர் பின்பற்றிப் பிற்காலத்தில் கிறித்தவச் சமயம் சார்ந்த பல உரைநடை நூல்களை இயற்றினார். அவரது மொழிநடை எவ்வாறு இருந்தது என்பதற்கு அவர் எழுதிய கீழ்க் குறிப்பிடும் முன்னுரை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு:

> கர்த்தராகிய பராபரம், மகா இரக்கமாய்ச் சர்வ மனுஷ சாதிக்கும் பரமண்டலத்திலிருந்து

அனுப்பின தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்கிற உலக இரட்சகருடைய சுவிசேஷத்தை விளங்கப் பண்ணும் இந்தப் புத்தகத்தை வாசிக்கிற யாவருக்கும் பாக்கியம் கிடைக்கும்படியாக அவர்கள் இதன் மேல் புத்தியுள்ள சிந்தனையை வைத்து, தங்களுக்கு இதனாலே இருட்டில் உதிக்கிற வெளிச்சத்துக்கு இடைந்துபோகாமல், அதற்கு இடங்கொடுக்கக் கடவார்கள்.

மேற்குறிப்பிட்ட பத்தி முழுவதும் ஒரே ஒரு கூட்டுச் சொற்றொடரிலேயே அமைக்கப்பட்டுள்ளது. குறைந்தது 7 அல்லது 8 சொற்றொடர்களில் எழுதப்பட வேண்டிய ஒரு பத்தி, ஒரே சொற்றொடரில் அமைக்கப்பட்டுள்ளது. அவர் வாழ்ந்த காலத்தில், தமிழ்ப் புலவர்களும், அறிஞர்களும் தத்தம் புலமைகளைக் காட்டுவதற்காக, இவ்வாறு நீண்ட சொற்றொடர்களை அமைப்பது ஒரு மரபாக இருந்தது. இது செல்வாக்குப் பெற்ற ஒரு மொழி நடையாகக் கருதப்பட்டது. எனவே அந்த மரபைப் பின்பற்றி அவர் எழுதியுள்ளார். இருப்பினும், ஓரிரு சொற்களைத் தவிர, மிகவும் எளிமையான சொற்களையே பெரும்பான்மையும் கையாண்டுள்ளார். மிகவும் நிதானமாக, நிறுத்திப்படித்தால் எளிமையாகப் புரிந்துகொள்ளும் வகையிலேயே சொற்றொடரை அமைத்துள்ளார்.

சீகன் பால்கு, 'தம்பிரான்' என்ற சொல்லையும், இராபர்ட் நொபிலி, 'சருவேசுவரன்' என்ற சொல்லையும் பயன்படுத்தியுள்ளனர். பெப்ரிஷியஸ் கடவுளைச் சுட்டுவதற்குப் 'பராபரன்' என்ற சொல்லையே பயன்படுத்தி யுள்ளார்.

'பராபரம்' என்ற சொல் பரம்+அபரம் என விரியும். 'அபரம்' என்பது, பரம் என்பதன் எதிர்ச்சொல், பராபரன் என்பது கடவுள் (கட+உள்) என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையானது. கடந்தும் உள்ளே உறைகிற கடவுள் தன்மையைச் சுட்டுகிறது. எனவே பெப்ரிஷியஸ் 'பராபரன்' என்ற சொல்லைக் கையாண்டுள்ளது பொருத்தமாகவே

தோன்றுகிறது' என்று, பேராசிரியர் சரோஜினி பாக்கியமுத்து குறிப்பிடுகின்றார் (2003: 15). இவ்வாறு புதிய சொற்களையும் உருவாக்கி, மக்களுக்கு மிகவும் அறிமுகமான வடமொழிச் சொற்களையும் கையாண்டு, மக்களுக்கு எளிதில் புரியும் வகையில் தம் மொழிநடையை அமைத்துள்ளார்.

5.7. ஹென்றி பவர்

தம் உரைநடை நூல்களின் வாயிலாகவும், விவிலிய மொழிபெயர்ப்புகளின் வாயிலாகவும் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குத் துணை செய்தவர்களுள் அருள்திரு. ஹென்றி பவர் என்பவரும் குறிப்பிடத்தக்கவர்.

- **வாழ்க்கை**

இவர், பிரான்கோயிஸ் போவியர் (Francois Bouvier) என்னும் பிரஞ்சுப் போர்வீரர்க்கும், இந்தியப் பெண்மணிக்கும் பிறந்தவர். இராணுவ அனாதையர் ஆண்கள் இல்லத்தில் (Military Male Orphan Asylum) தங்கி, அவ்வில்லத்துடன் தொடர்புடைய பள்ளியில் பயின்றவர். 1832-இல் இலண்டன் சென்று, அங்குள்ள வேதபோதகச் சங்கத்தில் (London Missionary Society) கிறித்தவ அருள் தொண்டராகப் பயிற்சி பெற்று, 1838-இல் இந்தியாவிற்குத் திரும்பினார். திருவள்ளூருக்கு அருகாமையிலுள்ள திருப்பாச்சூரில் தம் சமயத் தொண்டைத் தொடங்கினார் (2003: 27).

- **தமிழ் கற்றல்**

சமணப் புலவரான சாத்திரம் ஐயர் என்பவரிடம் முறையாகத் தமிழ் கற்றார். ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன், பிரஞ்சு, சமஸ்கிருதம், கன்னடம், இந்துஸ்தானி ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார்.

திருக்குறள், சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களிலும், நன்னூல் என்ற இலக்கண நூலிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

● **தமிழ்ப்பணி**

விவிலியத்தின் தமிழ் மொழிபெயர்ப்புக் குழுவில் பங்கு பெற்று, தமிழ் விவிலிய நூல் வெளிவருவதற்குப் பேருதவி செய்தார்.

"ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணியில் நாமகள் இலம்பகத்திற்குத் தமிழுடன் ஆங்கில உரை ஒன்றையும் எழுதியுள்ளார். நன்னூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

ஆங்கிலத்தின் வாயிலாக ஊழியம் செய்வதைவிட தமிழில் ஊழியம் செய்வதையே விரும்பினார். தம் விருப்பம் நிறைவேறும் வகையில் சமயச் சடங்குகள் இல்லாமல் மக்களுக்குப் புரியும் வகையில் மிகவும் எளிமையாகவே தமிழில் தம் சமயத் தொண்டினை ஆற்றி வந்தார்.

● **உரைநடை நூல்கள்**

அருள்திரு பவர் மொத்தம் 11 நூற்கள் இயற்றியதாக த. நான்சிபியூலா என்பவர் குறிப்பிடுகின்றார் (2003: 32). இவற்றுள் 7 நூல்கள் உரைநடை நூல்கள்.

1. நியாயப் பிரமாண விளக்கம் (1847)
2. விசுவாசப் பிரமாண விளக்கம் (1851)
3. இந்து மதத்திற்கும் பாப்பு மதத்திற்கும் இருக்கிற சம்பந்த விளக்கம் (1851)
4. சாதி வித்தியாச விளக்கம் (1857)
5. தர்மசாத்திரசாரம் (1857)
6. பிரசங்க ரத்தினாவளி (1875)
7. கிறித்தவ மார்க்கம் இந்து தேசத்தில் விருத்தியான சரித்திரம் (1879)

மேலும் சமயங்களைப் பற்றிய ஒப்புமை கருத்துகள் அடங்கிய கட்டுரைகள் தர்க்க சாத்திரங்கள் பற்றிய கட்டுரைகள் பலவற்றையும் வெளியிட்டுள்ளார்.

● பங்களிப்பு

பவர் கிறித்தவ விவிலியத் தமிழ் மொழிபெயர்ப்பில் பெரும்பங்களிப்பு செய்தார். அதோடு உரை நூல்கள் பலவற்றையும் இயற்றினார். இவை தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்தன.

'தமிழில் விவிலிய மொழிபெயர்ப்பு வரலாறு' ஒருவகையில் தமிழ் உரைநடை வரலாறாக அமைந்துள்ளது. தமிழ் உரைநடை தனி இலக்கிய வகையாக மாறி வந்த காலக் கட்டத்தில் பவர் மொழிபெயர்ப்பு வெளியீடு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்' (2003: 43). மேலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் உரைநடையைப் பற்றி ஆராய்ந்து நூல் எழுதிய பேராசிரியர், அ.மு. பரமசிவானந்தம் அவர்களும் 'பவர், தமிழ் உரைநடையின் வளர்ச்சிக்கும் பெருமளவில் உதவியவர்' என்று குறிப்பிடுகின்றார்.

6

பல்துறை உரைநடை நூல்கள்

தொடக்கக் காலத்தில் சமயக்கருத்துக்கள் மட்டுமே இடம்பெற்ற உரைநடை நூல்களை எழுதிய ஐரோப்பியக் கிறித்தவப் பாதிரிமார்; மொழிபெயர்ப்பு நூல்கள், உரை நூல்கள், புனைகதை ஆகியவற்றையும் இயற்றினர். அதோடு மட்டுமல்லாமல், மருத்துவம், கணிதம், நிலவியல் (Geography) வரலாறு ஆகியவை பற்றிய நூல்களையும் வெளியிட்டனர்.

● **மருத்துவம்**

அமெரிக்க மிஷனைச் சார்ந்த **டாக்டர் சாமுவேல் பிஸ்க் கிறீன்** (Dr. Samuel Fisk Green) என்பவர், சமயப்பணிக்காக, 1847-இல் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். அங்கு, 1850-இல் நிறுவப்பட்ட மருத்துவக் கல்லூரியிலுள்ள மாணவர்களுக்கு மருத்துவம் பற்றிய பாடங்களைக் கற்பிக்கும் பொறுப்பேற்றார். தொடக்கத்தில் அவர்களுக்கு, ஆங்கிலத்தின் வாயிலாகக் கற்பித்தார். ஆங்கிலத்தில் சொல்லப்படும் கருத்துக்களை மாணவர்களால் புரிந்து கொள்ள இயலாத நிலையை நன்கு உணர்ந்த **டாக்டர் கிறீன்**, பல ஆண்டுகள் முயற்சிக்குப் பின்னர், மருத்துவக் கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்கி, தமிழின் வாயிலாக மாணவர்களுக்கு மருத்துவம் பற்றிய செய்திகளைக் கூறினார். **மானுசெல்** (Manusell) என்பவர் மகப்பேறு (Obstetrics) பற்றிய நூலைத் தழுவி, தமிழில் ஒரு நூல் எழுதினார். அதைப்போல், அறுவைச் சிகிச்சை பற்றி டுருயிற் (Druitt) எழுதிய நூலையும், உடல் உறுப்புகளின் அமைப்பியல் (Anatomy) பற்றி கிரே (Gray) என்பவர் எழுதிய

நூலையும், உடலியல் (Physiology) பற்றி **டல்டோ** (Daltoe) எழுதிய நூலையும், **வெல்** (Well) என்பவர் எழுதிய வேதியியல் பற்றிய நூலையும் தமிழில் மொழிபெயர்த்து உரைநடை நூலாக எழுதினார். உடல் உறுப்புக்களின் அமைப்பியல் என்ற நூலில் மனித உறுப்புக்களின் படங்களையும் அவற்றைப் பற்றிய விளக்கங்களையும் கொடுத்துள்ளார். மேலும் **ஆத்மோபதேசவிவாரணம், மருத்துவ வைத்தியம்** என்ற நூல்களையும் வெளியிட்டார்.

இந்நூல்களை, டாக்டர் கிறீன் எழுதுவதற்கு யாழ்ப்பாணத்தைச் சார்ந்த அவரது மாணவர் **டாக்டர் வைத்தியலிங்கம்** என்பவர் பெருந்துணையாக இருந்தார். மருத்துவம் பற்றிய செய்திகளைத் தமிழ் உரைநடை நூல்களின் வாயிலாக வெளிப்படுத்திய பெருமை டாக்டர் கிறீன் அவர்களைச் சாரும்.

- **கணிதம்**

கணிதம் பற்றிய செய்திகளை முதல்முதலாக உரைநடை நூல்கள் வாயிலாக வெளிப்படுத்தியவர்களும் ஐரோப்பியக் கிறித்தவர்களே. தமிழ் உரைநடையிலான கணித நூலை முதலில் எழுதியவர் **டாக்டர் காரோல்** (Dr. Carrol) என்பவர். இவர், இயற்கணிதம் (Algebra) பற்றி எழுதினார். **வடிவ கணிதம்** (Geometry) என்ற தமிழ் உரைநடை நூலை **டேவிட் சாலோமன்** (David Solomon) என்பவர் எழுதினார்.

- நிலவியல்

நிலவியல் தொடர்பான தமிழ் உரைநடை நூல்களை அறிமுகப்படுத்த முயன்றவர். **டபிள்யு. டெயிலர்** (Rev. W. Taylor) என்பவர். இவர் 'கீழ்த்திசை நாடுகளில் தமிழ் மொழியின் வரலாற்றுக் கையெழுத்துப் பிரதிகள்' என்ற நூலில் நிலவியல் பற்றிய செய்திகளைக் கூறியுள்ளார். சி. ரேனியஸ் (Rev. C. Rhenius) பாதிரியார், '**பூமி சாஸ்திரம்**' என்ற உரைநடை நூலை எழுதினார். இது, 1832-ஆம் ஆண்டு சென்னையில் வெளியிடப்பட்டது. இந்த நூலில், முதல் பகுதி, நிலத்தின் இயற்கையைப் பற்றிக் கூறுகிறது. பின்னர்,

கண்டங்களைப் பற்றிக் கூறுகிறது. நூலின் இறுதியில் இடங்களின் பெயர்கள் அகரவரிசையில் கூறப்பட்டுள்ளன. இந்த நூலின் முன்னுரையில், தமிழர்களுக்கு நிலவியல் அறிவு உண்டாகும்படி இந்நூல் இயற்றப்படுவதாகக் கூறப்பட்டு உள்ளது.

- வரலாறு

ஐரோப்பியப் பாதிரிமார்களைப் பின்பற்றி, மேலும் பல நிலவியல் தொடர்பான தமிழ் உரைநடை நூல்களில் வரலாறும் இடம்பெற்றது. **டாக்டர் ஸ்மித்** (Dr. Schmidt) என்பவர் 1830-இல் '**உலக வரலாறு**' என்ற ஓர் உரைநடை நூலை எழுதியுள்ளார். டாக்டர் போப் '**பள்ளிகளுக்குப் பயன்படும் இந்திய வரலாறு**', '**இங்கிலாந்தின் வரலாறு**' என்ற இரு நூல்களையும் எழுதினார் என்பதை முன்னர் பார்த்தோம்.

டேவிட் சிங்களேயர் (David Sinclair) என்பவர், 1887இல் '**இந்து தேச சரித்திர சாரசங்கிரகம்**' எனும் ஒரு வரலாற்று நூலை எழுதினார், டாக்டர். கால்டுவெல் அவர்களும், 'பாரதி கண்ட புராதனம்' என்ற வரலாற்று நூலை எழுதினார் என்பதை முன்னரே அறிந்தோம்.

'**தென்பகுதி இந்திய தேசக் கதைக் குறிப்பு**' எனும் நூலை **ஒரேஸ் ஹேமேன் வில்சன்** (Horace Hayman Wilson) என்பவர் எழுதி வெளியிட்டார்.

இவ்வாறு, பல்துறை உரைநடை நூற்கள் பலவற்றையும் ஐரோப்பியக் கிறித்தவ பாதிரிமார் அறிமுகப்படுத்தினர்.

7

கிறித்தவர் பங்களிப்பு

பண்டைய காலத்திலிருந்தே தமிழகத்திற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் வணிகத் தொடர்புகள் இருந்திருக்கின்றன. பின்னர், 16-வது நூற்றாண்டில் ஐரோப்பியர் கொண்ட வணிகத்தொடர்பு அரசியலில் நுழைந்து ஆட்சியைக் கைப்பற்றியதோடு அமையாது, தம் சமயத்தையும் சமயக் கருத்துக்களையும் பரப்பும் முயற்சியில் ஈடுபடச் செய்தது. இவற்றால் இந்தியாவில் அரசியலிலும், சமுதாயத்திலும் பல்வேறு வகையான மாற்றங்கள் நிகழ்ந்தன. சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் நன்மைகள் பல விளைந்தன.

- **கல்வி வழங்கியமை**

சாதிய அமைப்புக் கொண்ட இந்திய சமுதாயத்தில் பல்லாண்டுக் காலமாக இருந்து வந்த ஏற்றத்தாழ்வுகள், ஓரளவுக்குக் குறைந்தன. சமுதாயத்தில் மேல் மட்டத்திலிருந்தவர்கள் மட்டுமே அனுபவித்து வந்த பல சலுகைகள் அடிமட்டத்தில் வாழ்ந்த ஒடுக்கப்பட்டவர்களும் அனுபவிக்கக் கூடிய புதிய சூழலும் புதிய வாய்ப்பும் ஏற்பட்டன. குறிப்பாக, நீண்ட நெடுங்காலமாக மறுக்கப்பட்ட கல்வி, எல்லோருக்கும் வழங்கப்பட்ட புரட்சி ஏற்பட்டது. பரந்து விரிந்த உலகத்தோடும் உலக மக்களோடும் தொடர்பு கொள்வதற்குரிய ஆங்கிலமொழி அறிவு ஏற்பட்டது. இவை அனைத்தும் ஐரோப்பியர் வருகையால் இந்தியாவில் - தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்.

மேற்குறிப்பிட்டவற்றிற்கும் மேலாக, இந்திய மொழிகளிலுள்ள இலக்கியங்கள் அளவிடற்கரிய முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் அடைந்தன.

● பாதுகாப்பும் பதிப்பித்தலும்

தகுந்த பாதுகாப்பின்றி, மறைந்து கொண்டிருந்த பழைய ஏட்டுச் சுவடிகளிலும், கையெழுத்துப் பிரதிகளிலும் இருந்த இலக்கியங்களும் ஐரோப்பியர்களால் அறிமுகப்படுத்தப் பட்ட அச்சுக்கலையால் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டன.

தமிழ் இலக்கியத்தில், டாக்டர் உ.வே.சாமிநாதையர், சி.வை. தாமோதரம்பிள்ளை ஆகிய அறிஞர்களின், அயராத உழைப்பால், அரும்பெரும் முயற்சிகளால் பேணுவாரற்று அழிந்துகொண்டிருந்த பழைய தமிழ் இலக்கியப் புதையல்கள் (Treasures) கண்டெடுக்கப்பட்டன; நூலாக அச்சிடப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. ஐரோப்பியக் கிறித்தவர்களின் அரும் பெரும் முயற்சிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட அச்சகங்கள் இல்லாவிட்டால், தமிழின் வளத்தையும் பெருமையையும் உலகறியச் செய்த பண்டைய இலக்கியங்கள் நமக்குக் கிடைத்திருக்குமா என்பது ஐயமே. தமிழ் இலக்கியப் பாதுகாப்பும் அச்சிட்டு வெளிப்படுத்தலும் ஐரோப்பியக் கிறித்தவர்கள் தமிழுக்கு அளித்த பெருங்கொடை.

● அச்சுக்கலையின் பயன்

இந்த நூற்றாண்டில் அறிமுகமான கணிப்பொறி, உலகில் அளவிடற்கரிய பல மாறுதல்களையும் முன்னேற்றத்தையும் விளைவித்துள்ளது. கணிப்பொறியின் சாதனைகளாலும், பயன்களாலும் உலகம் ஒரு குவலயக் கிராமமாக (Global Village) மாறி வருகிறது. இதைப்போல் தான், ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தப்பட்ட அச்சுக்கலை அரசியலிலும், சமுதாயத்திலும், மக்களின் சிந்தனைகளிலும், இலக்கியங்களிலும் பல மாற்றங்களை உருவாக்கியது. உலகத் தொடர்புகளை ஏற்படுத்தியது. அறிவியல் கண்டுபிடிப்பு களுக்கும், அதன் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பு அளித்தது. கருத்துப் பரிமாற்றங்கள் அச்சிட்ட நூல்கள் வாயிலாக நிகழ்ந்தன. அவை, பல நிலையில் முன்னேற்றங்களை ஏற்படுத்தின.

அச்சுக்கலை ஐரோப்பாவில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது என்பர். தமிழகத்திலும் ஐரோப்பியக் கிறித்தவப் பாதிரிமார்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அச்சுக்கலை, தமிழ் இலக்கியத்தில் பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. உரைநடை நூல்கள் பலவற்றைத் தோற்றுவித்து, தமிழ் உரைநடையை வளர்ச்சியடையச் செய்தது. மேலும், மேலும் தமிழ் உரைநடை நூல்கள் வெளிவருவதற்குரிய வாய்ப்பை நல்கியது. இவற்றிற்குக் காரணமாக அமைந்தது ஐரோப்பியக் கிறித்தவப் பாதிரிமார்களின் தமிழ்ப் பணியேயாகும்.

● உரைநடை முன்னோடிகள்

வீரமாமுனிவர், இராபர்ட்-டி-நொபிலி, டாக்டர். கால்டுவேல், டாக்டர். ஜி.யு. போப், சீகன்பால்கு, பெப்ரிஷியஸ், ஹென்றி பவர், டாக்டர். கிறீன், டாக்டர். காரோல், டேவிட் சாலோமன், டெயிலர், ரேனியஸ், டாக்டர் ஸ்மித், டேவிட் சிங்களேயர், ஹேமேன் முதலிய பல ஐரோப்பியர்கள் கிறித்தவச் சமயத்தைச் சார்ந்தவர்கள்; தமிழ் உரைநடை நூல்கள் பலவற்றை எழுதி, தமிழ் உரைநடையின் வளர்ச்சிக்குப் பெரும்பங்கு அளித்தனர்.

7.1. ஐரோப்பியக் கிறித்தவர்கள் தமிழ்ப்பணி

தமிழகத்திற்குச் சமயம் பரப்ப வந்த ஐரோப்பியர் களில் பலர், எதில் ஈடுபட்டாலும், அதில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளும் கொள்கையுடையவர்கள். சமயத் தொண்டராகப் பணியாற்றுவதற்காக, தம்மைத் தம் இளவயதிலேயே ஒப்புக்கொடுத்தவர்கள். எனவே, சமயப் பணியில் ஈடுபட்டபொழுது, தாம் சொல்லும் சமயக் கருத்துக்கள் தடையெதுவுமின்றி மக்களிடம் நேரடியாகச் சென்று அடையவேண்டும். அவர்கள் உள்ளத்தைத் தொட வேண்டும் என்று கருதினார்கள். அதற்கு அவர்கள் கண்ட ஒரே வழி மக்கள் பேசும் மொழியைக் கற்கவேண்டும்; அவர்களோடு உரையாடவேண்டும்; அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் கருத்துக்களை எழுதி வெளியிட வேண்டும் என்று தீர்மானித்தார்கள். எனவே தமிழ் மொழியைக் கற்றார்கள்.

அவ்வாறு கற்றவர்களுள் பெரும்பான்மையோர் சிறந்த அறிவாளிகள், மருத்துவர்கள், மொழி வல்லுநர்கள். எனவே, தம் அறிவாற்றலால் தமிழ்மொழியின் தனித் தன்மையை உணர்ந்தார்கள். இலக்கணம் உட்பட்ட பல நூல்களைப் படைத்தார்கள்.

- **இலக்கியப் படைப்புகள்**

தமிழ் இலக்கியத்தின் செழுமையை அறிந்தார்கள். காப்பியம், சிற்றிலக்கியம் என்று இலக்கியங்கள் பல படைத்தார்கள்.

- **மொழிபெயர்ப்புகள்**

தமிழ் இலக்கியத்தை நன்கு சுவைத்தார்கள். தாம் அனுபவித்த சுவையைப் பிறருக்கு எடுத்தியம்ப விழைந்தார்கள். மொழிபெயர்ப்பு நூல்களை எழுதினார்கள்.

- **அச்சிடல்**

தகுந்த பாதுகாப்பின்றி அழிந்துபோகும் நிலையிலிருந்த ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றிற்குப் பாதுகாப்பும் புதுவாழ்வும் கொடுக்க விரும்பினார்கள். அச்சகங்களின் வாயிலாக அச்சிட்டு நூலாக வெளியிட்டார்கள்.

- **நவீன இலக்கிய அறிமுகம்**

வளம்பல பெற்ற தமிழ் மொழியில் நவீன இலக்கிய வகைகள் அறிமுகமாகாத நிலையை உணர்ந்தார்கள். தகுதி வாய்ந்த ஒருவரை ஊக்குவிப்பதுபோல, உரைநடை நூல்கள் பலவற்றைப் படைத்தார்கள். உரைநடை நூல்கள் வாயிலாகப் புதிய இலக்கிய வடிவங்கள் தோன்றி வளர வழிவகுத்தார்கள்.

- **எளிமையும் தெளிவும்**

தமிழ் உரைநடை வளர்ச்சியைப் பொறுத்தவரையில் ஐரோப்பியக் கிறித்தவர்களின் பங்களிப்பு கணிசமானது. உரைநடை நூல்களைத் தோற்றுவித்ததோடு அமையாது, மக்கள் பயனடையும் வகையில், தம் மொழிநடையில் எளிமையையும் தெளிவையும் புகுத்தினார்கள். உரைநடை வளர்ச்சியில் பாமரரையும் பங்குகொள்ளச் செய்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் புலவர் ஆறுமுக நாவலரின் (1822-1889) உரைநடையையும் ஐரோப்பியக் கிறித்தவப் பாதிரியார் ஒருவரின் நடையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வுண்மை புலப்படும்.

கீழ்க்குறிப்பிடுமாறு, ஆறுமுக நாவலரின் காண்டிகை உரை அமைந்ததுள்ளது.

> *'சூரியன் தன் கிரணத்தினாலே புறவிருளை அகற்றிக் கட்பொறிக்கு விடயமாகிய உருவங்களை விளக்குதல் போலக் கடவுள் தன் கருணையினாலே அகவிருளை அகற்றி அறம் பொருள் இன்பம் என்னும் நான்கு உறுதிப் பொருளையும் விளக்கம் பெற்ற பதினெண் பாடைகளுள்ளும் கிழக்கே கீழ் கடலும் தெற்கே கன்னியா குமரியும் மேற்கே குடகு நாடும் வடக்கே திருவேங்கடமும் எல்லையாகவுடைய நிலத்து மொழியாகிய தமிழ்ப் பாடையினுள், எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்கணத்தையும், இலக்கியப் பயிற்சியில் வலியரேயன்றி எளியவரும் அறியும் பொருட்டுத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் செய்யப்படும் யாப்பினாற் செய்து தருக எனச் சீயகங்கன் சொல்லத், தொல்லாசிரியர் நூலின் வழியே நன்னூல் என்னும் பெயரினாற் செய்தனன் பவணந்தி முனிவன்' (1966: 3)*

மேற்குறிப்பிட்ட பகுதி முழுவதும் ஒரே ஒரு நீண்ட சொற்றொடரால் ஆனது. ஒரு முறைக்குப் பலமுறை படித்தால்தான் பொருள் ஓரளவுக்குப்புரியும். அதுவும் நிறுத்தி, நிறுத்திப்படித்தால் தான் புரியும். அந்த அளவுக்குக் கடினமொழி நடையை உடையது. ஆறுமுக நாவலின் நடையை நல்ல கல்வி அறிவும், தமிழ் அறிவும் பெற்றவர்களே புரிந்து கொள்ள இயலும். ஆறுமுக நாவலர் மிக்க கடினமான நடையை கையாண்டுள்ளார். 'கட்பொறிக்கு', 'விடயமாகிய', 'பாடை' (பாஷை) 'வலியரே', போன்ற சொற்கள் நல்ல புலமைபெற்ற தமிழறிஞர்களால் மட்டுமே

விளங்கிக் கொள்ள முடியும். உரையின் ஊடே 'எளியவரும் அறியும் பொருட்டு' என எளியவர்கள் கற்று உணரும் பொருட்டு எளிமைப்படுத்தி எழுதியதாகக் குறிப்பிடப்பட்ட பகுதியே இவ்வளவு கடினமாக இருந்தால், அவரது சமகால நூலாசிரியர்களின் உரைநடை நூல்களின் மொழிநடை எவ்வாறிருந்திருக்கும் என யூகிக்க முடியும்.

● மரபும் மாற்றமும்

ஆறுமுக நாவலர் கையாண்டுள்ள மொழிநடையின் இத்தகைய போக்கு, அவரது காலக் கட்டத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் பலரிடம் இருந்தது. தம் புலமையைப் புலப்படுத்தும் வகையில் நீண்ட சொற்றொடர்களால் பத்தி அமைப்பதும், மக்களுக்கு எளிதில் புரியாத வகையிலான கடினமான சொற்களைப் பெய்து எழுதுவதும் அன்றைய மரபாக இருந்தது. ஆனால் இப்போக்கிற்கு முற்றிலும் மாறாக, தனிச் சொற்றொடர்களில், மிக எளிமையாக, மக்களுக்கு அறிமுகமான சொற்களைப் பயன்படுத்தி, தம் உரைநடையை அமைத்தார்கள் ஐரோப்பியப் பாதிரிமார். எடுத்துக்காட்டாக, டாக்டர். கிறீன் என்பவர் எழுதிய கீழ்க்காணும் உரைநடையைக் குறிப்பிடலாம்.

> 'புலன்கள் என்பது பொறிகள் வழியாய் மனதிலே உண்டாகும் உணர்ச்சியால் அமைவது. புலன்கள் ஐந்து, அவையாவன: பரிசம் அல்லது ஊறு; இரசம் அல்லது சுவை; கந்தம் அல்லது நாற்றம்; உருவம் அல்லது ஒளி; சத்தம் அல்லது ஓசை என்பவைகளே.
>
> தோலிலேயிருக்கும் நரம்புகள் தானே இப்புலனுக்கு ஆதாரமாயிருக்கின்றன. அந்நரம்புகள் முன்னந்தண்டுக் கொடி நெடுக அதின் பிற்பாதியிலிருந்து கிளம்புகின்றன.'
> (அங்காதி பாத சுகரணவாத உற்பாவனநூல் 1867: 442)

மேற்குறிப்பிட்ட பகுதியிலுள்ள மொழி நடையையும் ஆறுமுக நாவலரின் மொழிநடையையும் ஒப்பிட்டுப்

பார்த்தால், முற்றிலும் அந்நியமான மொழி பேசும் நாட்டைச் சார்ந்த ஐரோப்பியக் கிறித்தவர்கள் எவ்வளவு எளிமையாகப் பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில் தம் மொழி நடையை அமைத்து எழுதியுள்ளார்கள் என்பது புலனாகும். ஒரு மருத்துவர், கையாண்டுள்ள மொழிநடை மிகவும் தெளிவாகவும் (Clarity), எளிமையாகவும் காணப்படுகிறது.

இராபர்ட்-டி-நொபிலியைத் தவிர ஏனைய ஐரோப்பியக் கிறித்தவர்கள் கையாண்டுள்ள மொழிநடை மேற்சுட்டிக் காட்டியது போல இயன்றளவுக்கு எளிமையாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளது. அவர்களது நோக்கம் தாம் சொல்லும் கருத்துக்கள் அல்லது செய்திகள் எழுதப்படிக்கத் தெரிந்த சாமானியர்களையும், சென்றடைய வேண்டுமென்பதேயாகும்.

- **பயன்கள்**

ஐரோப்பியக் கிறித்தவர்கள் பயன்படுத்திய மொழிநடை, தமிழ் உரைநடை நூல்களில் எளிமையைப் புகுத்தின. அல்லல்படாமல் எழுதவும், அல்லல்படாமல் படிக்கவும் வழி வகுத்தது. அவற்றைப் பின்பற்றி எளிய மொழிநடையில் உரைநடை நூற்கள் பல தோன்றுவதற்கு வாய்ப்பளித்தன. அதனாலும் தமிழ் உரைநடை வளர்ச்சி யடைந்தது. பல உரைநடை நூற்களை இயற்றியதோடு, மேலும் பல உரைநடை நூல்கள் எழுதப்படுவதற்கும் ஐரோப்பியக் கிறித்தவர்கள் காரணமாக அமைந்தார்கள்.

- **அறிஞர் கருத்து**

தமிழ்மொழிக்கு ஐரோப்பிய அறிஞர்கள் ஆற்றிய அருந்தொண்டைப் பற்றி ஆய்வு செய்த, தமிழ் அறிஞர் பேராசிரியர் கா. மீனாட்சி சுந்தரனார் அவர்கள், ஐரோப்பியக் கிறித்தவர்கள் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்பைப் பற்றி,

> ‘தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஐரோப்பியக் கிறித்தவர்கள் பெருந்தூண்டுதலாக

> அமைந்தனர். நிலவியல், அறிவியல், வரலாறு, சிறுகதை போன்றவை தமிழில் வருவதற்குக் காரணமாக இருந்தனர். மக்களுக்கு எளிதில் கிடைக்க முடியாத நிலையிலிருந்த நூல்கள், அச்சடித்தலினால் எளிமையாக எல்லோருக்கும் கிடைத்தன. தமிழ் இலக்கியத்தின் ஆற்றலை மக்கள் உணரும்படி செய்தனர். இதழியல் தொடர்பான வார இதழ், மாத இதழ், நாளிதழ் முதலிய வற்றைத் தொடங்கி, குறிப்பிடத்தக்க வகையில் தமிழ் உரைநடை வளர்ச்சியடை வதற்குப் பெருந்துணை செய்தனர். கல்வி முறை மாற்றம், தற்கால முன்னேற்றப்பாதை ஆகியவற்றிற்கு வழி வகுத்தனர்.
>
> *(1974: 337 & 338)*

என்று ஐரோப்பியக் கிறித்தவர்கள் தமிழுக்கு - தமிழ் உரைநடைக்கு ஆற்றிய தொண்டினை மதிப்பீடு செய்துள்ளார்.

பேராசிரியர் கா.மீ. அவர்களின் கணிப்பே இந்நூலாக மலர்ந்துள்ளது.

பயன்பட்ட நூல்கள்

தமிழ்

ஆறுமுக நாவலர், **நன்னூல் காண்டிகை உரை**, ஆறுமுக நாவலர் - வி. அச்சகம், சென்னை - 1, 1966 (24ஆம் பதிப்பு).

ஏசுதாசன், மோசஸ் மைக்கேல் பாரடே (தொகுப்பாசிரியர்கள்), **தமிழ் வளர்ச்சியில் கிறித்தவச் சான்றோர்**, கிறித்தவ இலக்கியத் தமிழ்ப் பேரவை வெளியீடு, சென்னை - 86, 2003.

கைலாசபதி. க., **ஒப்பியல் இலக்கியம்**, பாரி நிலையம், சென்னை - 1, 1969.

சீனிவேங்கடசாமி. மயிலை., **கிறித்தவமும் தமிழும்**, திருநெல்வேலி, சைவ சித்தாந்தக் கழகம், சென்னை - 1, 1936.

டேவிட் பிரபாகர், **கிறித்தவத் தமிழ் நடையியல் நோக்கு**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113, 2002.

தேவராஜ். டி., **கிறித்தவர் வளர்த்த பைந்தமிழ்**, திருவள்ளுவர் நகர், பழங்காநத்தம், மதுரை - 625 003, 2000.

பண்டார நம்பியார், **தமிழ் வளர்த்த தைரியநாதர் என்னும் வீரமாமுனிவர்**, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1970.

பரமசிவானந்தம். அ.மு., **தமிழ் உரைநடை**, தமிழ்க் கலைப் பதிப்பகம், சென்னை, 1959.

முத்துசாமிப்பிள்ளை, **வீரமாமுனிவர் சரித்திர வரலாறு**, சென்னை - 1943.

ரம்போலோ மாஸ்கரேனஸ், **கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள்**, தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி, 1972.

வளன் அரசு. பா., **தேம்பாவணித் திறன்**, கதிரவன் பதிப்பகம், பாளையங்கோட்டை 1988

ஆங்கிலம்

Meenakshisundaram, K., **The contribution of European Scholars to Tamil,** University of Madras, 1974.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

தமிழில் பிறதுறைக் கோட்பாட்டாய்வுகள் வரலாறும் மதிப்பீடும்	25.00
வ.உ.சி ஒரு பன்முகப் பார்வை	25.00
இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி	35.00
சுவடிப்பதிப்புக்கலை வழிகாட்டி டாக்டர் உ.வே.சா	50.00
தொல்காப்பியத் தொடரியல்	120.00
மொழி பெயர்ப்புத் தமிழ்	60.00
சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள்	45.00
தெ.பொ.மீ.யின் தமிழ்த் தொண்டும் மொழியியல் பங்களிப்பும்	25.00
சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர்	80.00
பாரதியின் சமுதாயச் சிந்தனைகள்	25.00
மூதறிஞர் மு. இராகவையங்கார்	40.00
ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு	30.00
தணிகைமணி வ.சு.செங்கல்வராயப் பிள்ளை	50.00
தட்சிணாமூர்த்தி குருமுகம்-100	50.00
நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்	50.00
அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா.	50.00
ஆராய்ச்சிப் பேரறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார்	45.00
விவிலியத் தமிழ்	40.00
இக்கால உலகிற்குத் திருக்குறள்- 3தொகுதிகள்	260.00
திராவிட மொழி இலக்கியங்கள்	180.00
நாவல்கலையியல்	50.00
சங்கரநமச்சிவாயர்	60.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	40.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ.நா.அப்புசுவாமி	60.00
சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்	30.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கியம்	100.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு	50.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00
இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும்	40.00
திருக்குறளில் பொதுநிலை உத்திகள்	30.00

534 தமிழ் உரைநடையும் கிறித்தவர் பங்களிப்பும் 20.00